# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 1 திங்கட்கிழமை (14-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:50


# தென்னிந்தியாவைத் தவிர வேறெங்கும் பேச்சு நடப்பதற்குச் சாத்தியமில்லை!

## அன்ரன் பாலசிங்கம் கூறுகின்றார்



லண்டன்,ஜனவரி14

**"இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு நடப்பதானால் அது தென்னிந்தியாவில்தான் நடக்கவேண்டும். வேறு எங்கேயும் பேச்சு நடக்கும் சாத்தியம் இல்லை. இந்த விஷயத்தின் அடிப்படையில் உள்ள மனிதாபிமானப் பரிமாணத்தைப் பலரும் கருத்தில் கொள்கின்றார்கள் இல்லை. அரசியலாக்கிக் குழப்புகின்றார்களே!"**

**- இப்படிக் கவலை தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.**

"நீங்கள் இந்தியாவில் தங்கியிருந்து பேச்சுக்களில் ஈடுபடுவதை அங்குள்ள அரசியல் கட்சிகள் பலவும் விரும்பவில்லை. நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் பேச்சு நடத்தலாம் என்று ஓர் ஆலோசனை கூறப்படுகின்றதே. அங்கு போவீர்களா?" - என்று கேட்கப்பட்ட போதே பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்னிந்தியா தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் தாம் தங்கியிருந்து பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியாது என்பதற்கு அவர் முக்கியமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்னும் ஒரு மாதத்தில் சமாதானம் ஏற்பட்டாலும் கூட ஆச்சரியமில்லை!

### அவ்வளவு நம்பிக்கை வெளியிடுகிறார் நோர்வே அமைச்சர்

கொழும்பு,ஜன.14

"இலங்கையில் வெகுவிரைவில் சமாதானம் ஏற்படும். அது இன்னும் ஒரு மாத காலத்துக்குள் ஏற்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தெரிவித்துள்ளார்.

'நோர்வே போஸ்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார். தற்போது பேணப்படும் தற்காலிக மோதல் தவிர்ப்பை நிரந்தர யுத்தநிறுத்தமாக்க முடியும் என்ற நம்பிக்கை (12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை உதயன் வழமைபோல்!

இன்று தைப்பொங்கல் விடுமுறை எனினும் 'உதயன்' நாளை வெளிவருவான்.

## ஜயலத்துக்கு நேற்று வரவேற்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு பல இடங்களிலும் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை பலாலி வந்தடைந்த அமைச்சர் ஜயலத், முதலில இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் இல்லத்துக்குச் சென்றார். அங்கு அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதையடுத்து யாழ். செயலகத்தில் நடந்த மாநாட்டில் பங்குபற்றினார். பின்னர் தீவுப்பகுதிக்கு அவர் சென்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பூர்வாங்கப் பேச்சுக்களை மடுவில் நடத்த யோசனை

### அரசுத் தரப்பு ஆலோசிக்கிறது

கொழும்பு,ஜன.14

அரசு - விடுதலைப் புலிகள் இடையிலான சமாதானப் பேச்சுக்களின் பூர்வாங்கச்சுற்றை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மடுத் திருப்பதியில் நடத்துவது குறித்து இலங்கை அரசு பரிசீலித்து வருவதாக "த சண்டே ரைம்ஸ்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

கத்தோலிக்கர்களின் புனிதத் திருத்தலமான மடுவில் பூர்வாங்கச் சுற்றுப் பேச்சுக்களை நடத்தினால் புலிகளின் பிரதிநிதிகள் அந்தப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு இலகுவாக இருக்கும் என்று ஐக்கிய தேசிய முன்னணி அரசு கருதுவதாகவும் -

தமது தலைநகரான ஒஸ்லோவில

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணிலின் செயலர் யாழ். சிறைக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்ப்பாணம் வந்துள்ள - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அந்தரங்கச் செயலாளரும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவருமான - சமன் அத்தாவுட யாழ்.சிறைச்சாலைக்கு நேற்று பிற்பகல் சென்றார். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுடன் அங்கு சென்ற அவர் சிறைக் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் இ.திவ்வியனுடன் அவர் கலந்துரையாடினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி உரையாற்றிக் கொண்டிருக்கிறார். அருகில் ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் (இடது), துணை அமைச்சர் நூர்தீன் மசூர், அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா, அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.




அனைவருக்கும்
உதயனின்
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!



**பொங்கல் மலரை கேட்டு வாங்குங்கள்!**

இன்றைய 'உதயன்' இரண்டு பிரிவுகளாக வருகின்றது. செய்திப் பகுதி - பன்னிரண்டு பக்கங்கள். பொங்கல் சிறப்பு மலர் - பதினாறு பக்கங்கள்.

இணைப்பைத் தவறாது கேட்டு வாங்குங்கள்.


# அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து ஜயலத் அறிவிப்பு!

## யாழ்நகரில் நேற்று நடந்த மாநாட்டில்

யாழ்ப்பாணம்,ஜனவரி14

- வடக்குக் கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் சில உடனடியாக விலக்கப்படும்.
- வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையேயான கண்டிவீதி (ஏ-9) விரைவில் திறக்கப்படும்.
- வன்னிக்கு விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தடை நாளையுடன் ஓரளவு நீக்கப்படுகின்றது.
- குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துவருவதற்கான தடங்கல் நிலை, பயணத்துக்கான பாதுகாப்பு அனுமதி பெறும் முறை ஆகியனவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- மன்னாருக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்.

- யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று வந்து சேர்ந்த புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இத்தகவல்களை வெளியிட்டார்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த திணைக்களத் தலைவர்களின் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ்அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், வன்னி புனர்வாழ்வு துணை அமைச்சர் நூர்தீன் மசூர் ஆகியோரும் பங்குபற்றினர்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு அதிகாரிகள், யாழ். திணைக்களத் தலைவர்கள் உள்ளு

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் கூட்டத்தின் பிரதான மேசை வரிசையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரமுகர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான விநாயகமூர்த்தி, தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப-தலைவர் வீ.ஆனந்தசங்கரி, வன்னிக்கான புனர்வாழ்வு துணை அமைச்சர் நூர்தீன் மசூர், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா, இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் எம்.வாமதேவா, இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஆகியோர் அமர்ந்திருக்கும் காட்சியை மேலுள்ள படத்திலும் -

அக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஏனையோரில் ஒரு பகுதியினரை கீழ் உள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: பொ.இராஜேஸ்வரன்)



# நாளைமுதல் தடைகள் தளர்வு
# வன்னிக்கு பொருள்கள் கொண்டுசெல்லும் நடைமுறைகள் குறித்து செயலகம் அறிவிப்பு

வவுனியா,ஜன.14

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கு பொருள்களை எடுத்துச்செல்வதற்கான தடை நாளைமுதல் நீக்கப்படுகின்றது. இது தொடர்பான அறிவித்தலை வவுனியா செயலகம் நேற்று வெளியிட்டது.

அத்துடன் வன்னிக்கும் வவுனியாவுக்கும் இடையிலான மக்கள் போக்குவரத்து தொடர்பாக நாளை முதல் கடைப்பிடிக்கப்படவுள்ள புதிய நடைமுறைகள் குறித்தும் செயலகம் அறிவித்துள்ளது.

உத்தரவு பத்திரம் பெறாத ஆயுதங்கள், வெடி பொருள்கள், வெடி மருந்துகள், தூரத்திலிருந்து இயக்கும் கருவிகள் (Remote Contrel), தொலை நோக்கி (Binocular), நுணுக்குக்காட்டி (Telescope), பென்ரோச் பற்றறி, முட்கம்பி என்பனவற்றுக்கு தொடர்ந்து முழுமையான தடை இருக்கும் பெற்றோல், டீசல், சீமெந்து, இரும்புக் கம்பி என்பனவற்றை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எடுத்துச் செல்லமுடியும்.

இவை தவிர்ந்த ஏனைய பொருள்கள் அனைத்தையும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, எவரின் அனுமதியுமின்றி எடுத்துச்செல்ல முடியும்.

இவற்றை எடுத்துச்செல்வதில் ஏதாவது தடைகள் விதிக்கப்படுமாயின் அவை தொடர்பாக முறைப்பாடுகளை பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்கலாம்.

★ சமாதான நடவடிக்கை இணைப்பு செயலகம்

தொ.பே.இல. 338756-இணைப்பு 448, 346831 - இணைப்பு 449

★ செயலாளர், புனர்வாழ்வு அகதிகள் மீளக்குடியமர்வு அமைச்சு - 382068

★ மேலதிக செயலாளர், பாதுகாப்பு அமைச்சு - 430860 தொடக்கம் 340879வரை.

★ வன்னி பாதுகாப்புப்படை கட்டளை அதிகாரி - 024-22568;

★ அரச அதிபர், வவுனியா - 024-22235

இதேவேளை - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிக்கு பயணிகள் பயணம் செய்வதற்கு இதுநாள் வரை விதிக்கப்பட்டு வந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளதாக வவுனியா செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாளை செவ்வாய்க்கிழமை சனி - ஞாயிறு தவிர்ந்த 5 கிழமை நாள்களிலும் வன்னிக்கான பயணத்தை மேற்கொள்ளமுடியும். தினமும் 600 பயணிகள் செல்ல அனுமதிக்கப்படுவர்.

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள பிரதேச செயலர் அலுவலகத்தின் முன்னாள் இருந்து பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ் புறப்படும். காலை 8 மணி முதல் ஒரு மணி வரை பஸ்கள் அங்கிருந்து புறப்படும்.

வன்னியிலிருந்து வவுனியா வந்தோர் இனிமேல் பதிவேதும் செய்யாமலேயே மீண்டும் வன்னிக்கு, தமது பயணத்தை மேற்கொள்ளமுடியும். வரும்போது பிரமணாலங் குளம் பகுதியில் எடுத்துவந்த பாஸை காட்டி தமது பயணத்தை அவர்கள் மேற்கொள்ள முடியும்.

வவுனியாவில் வசிப்போர் தாம் வைத்திருக்கும் வவுனியா. பாஸை - பிறவுண் கோம்பனி கட்டடத்தில் இயங்கி வரும் பாஸ் அலுவலகத்தில் கொடுத்து வன்னிக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வவுனியாவுக்கும் தெற்கிலிருந்து வருவோர் - பிறவுண் கட்டடத்திலுள்ள பாஸ் அலுவலகத்திற்குச் சென்று விண்ணப்பம் ஒன்றைப் பூர்த்தி செய்து - தேசிய அடையாள அட்டை, வவுனியாவுக்குள் வருவதற்காக ஈரப்பெரியகுளத்திலோ அல்லது வவுனியா நகர நிலையத்திலோ பெற்ற பாஸ், தென்பகுதியில் தங்கியிருந்த போது பெற்ற பொலிஸ் பதிவு என்பனவற்றின் போட்டோ பிரதிகளைச் சமர்ப்பித்து விண்ணப்பிக்க வேண்டும். அவர்களது விண்ணப்பங்கள் உடனடியாகப் பரிசீலனை செய்யப்பட்டு மறுநாள் பயணம் செய்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

வெளிநாட்டிலிருந்து வருவோர் வெளிநாட்டு கடவுச் சீட்டு வைத்திருப்பவர்களாயின் கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொண்டு வந்து பிறவுண் அலுவலகத்தில் அதனைக் கொடுத்து வன்னி செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை கடவுச் சீட்டு வைத்திருப்போராயின் தென் பகுதியிலிருந்து வருவோர் விண்ணப்பிப்பது போன்று பிறவுண் அலுவலகத்தில் விண்ணப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## ஈ.பி.டி.பியின் பொங்கல் செய்தி

புதிய நம்பிக்கைகளைத் தோற்றுவித்தபடி மலர்ந்துள்ள புத்தாண்டில் பொங்கும் உள்ளங்களின் மகிழ்ச்சி நீடிக்கவேண்டும் என்று ஈ.பி.டி.பி தனது பொங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

தை மாதத்தின் முதலாவது நாள், உழவர் பெருங்குடி மக்களின் நன்னாள். வியர்வை சிந்த உழைத்து வாழ்வதனையே பெருமையாகக் கருதும் எமது மக்கள் விடாமுயற்சி, தன்னம்பிக்கை என்பவற்றுடன் துணைகொண்டு இயற்கையை எதிர்த்து நின்று வெற்றி பெற்றமையைக் குறிக்கும் அறுவடை நாள். இந்த அறுவடை நாளின் ஆனந்தம் நின்று நிலைக்கவும், நீடிக்கவும் எல்லாத் தரப்பும் உளப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் எமது மக்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

- இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மணல் அகழ்வதை தடுக்கக் கோரி அமைச்சர் ஜயலத்துக்கு மகஜர்

## வடமராட்சி கிழக்குப் பகுதி அமைப்புக்கள் வழங்கின

யாழ்ப்பாணம்,ஜன.14

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள குடத்தனை மற்றும் மணற்காட்டுப் பிரதேசங்களில் சுற்றுச் சூழல பாதிப்படையக் கூடிய விதத்தில் மணல் அகழப்படுவதை உடனடியாகத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு அந்தப் பகுதி அமைப்புகள் பல ஒன்றாக இணைந்து புனர்வாழ்வு மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பான மகஜர் ஒன்றினையும் அந்த அமைப்புகள் அமைச்சரிடம் கையளித்துள்ளன.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தியைக் காரணமாகக் கூறி பல வருடங்களாக எமது பகுதியிலிருந்து அளவுக்கதிகமான மணல் அகழப்பட்டு வந்துள்ளது. தொடர்ந்து இவ்வாறு மண் அகழப்படுவதால், ஏற்படக்கூடிய பாரிய அனர்த்தங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை சுட்டிக் காட்டியுள்ளோம். ஆயினும் அவர்கள் இது விடயத்தில் பாராமுகமாக இருந்து வந்துள்ளமையை தங்களுக்கு மிகவும் வேதனையுடன் அறியத்தருகின்றோம்.

இப்பகுதியில் தொடர்ந்து மணல் ஏற்றப்படுமானால் இவ்விடங்களில் வசிக்கும் எமது பாரம்பரிய வாழ்விடங்களும், எமது வாழ்வியலும் கேள்விக்குறியாகிவிடும் என நாம் அஞ்சுகின்றோம். ஒரு பிரதேசத்தை வளமாக்கிக் கொள்வதற்கு, எமது பிரதேசத்தை அழிப்பது எந்தவிதத்திலும் நியாயமாகாது என்பதைத் தாங்கள் அறிவீர்கள் எனவே நாம் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகளை தங்களுக்கு முன்வைக்கின்றோம்.

☆ இப்பிரதேசத்தின் பிரதான பௌதிக உறுப்பான மணல்மேடுகள், எமது வாழ்விடங்களுக்கும், கடற்பிரதேசத்திற்கும் இடையில் அரணாக அமைந்துள்ளன. இவை தொடர்ந்து அகழப்படுவதனால் எமது வாழ்விடங்களுக்குள் கடல்நீர் உட்புகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

☆ இப்பிரதேசத்தில் 280 ஹெக்டேயர் நிலப்பரப்பு விவசாய நிலமாகக் காணப்படுகிறது. கடல்நீர் உட்புகுமானால் விவசாயிகள் தமது தொழில் வாய்ப்பினை இழக்க வேண்டி ஏற்படும்.

☆ அண்மைக் காலமாக இப்பகுதியில் பல நன்னீர் நிலைகள் உவர்த்தன்மை உடையதாக மாறி வருகின்றன. இந்நிலை அதிகரித்தால் நாம் பாரிய நன்னீர் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

☆ யாழ்.குடாநாட்டின். மூளை மலேரியா நோய் பரவும் பிரதேசமாக இப்பகுதி இனங்காணப்பட்டுள்ளது. மணல் அகழப்படும் இடங்களில் பாரியளவில் நீர் தேங்கியுள்ளதால் இந்நோயின் தாக்கம் கடந்த வருடம் மிகவும் அதிகரித்துள்ளது.

இத்தகைய பிரச்சினைகள் தவிர 1971ஆம் ஆண்டு ஒகஸ்ட் 5 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட "முக்கிய காணிகள் பாதுகாப்புச் சட்டத்தின்" கீழ் நாகர்கோவில் தொடக்கம் கற்கோவளம் வரையான பிரதேசத்தில் மணல் அகழ்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதையும் உங்களுக்குச் சுட்டிக் காட்டுகின்றோம்.

இதற்கமைய வனவள சுற்றாடல் அமைச்சின் ஊடாக, எமது பிரதேசத்தில் பூரண ஆய்வொன்றை மேற்கொண்டு, எமது பிரதேசத்தை அழிவிலிருந்து பாதுகாக்குமாறு தங்களை பணிவன்புடன் வேண்டி நிற்கிறோம்.

- என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

## முச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் புத்தாண்டின் தொடக்கச் சமூகப்பணியாக வசதி குறைந்த ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் சமூகவியல் சமூகத்தலைவி செல்வி சகாயத்திரி தலைமையில் நடைபெறும். (ம)

## பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட தொலைக்காட்சி உரை

# 'காஷ்மீரில் நடப்பது சுதந்திரப் போர்' பாக்.அதிபர் முஷாரப் வலியுறுத்து!

## ஆயினும் 2 இயக்கங்களுக்குத் தடை மதரஸாக்களுக்கும் புதிய கட்டுப்பாடு

இஸ்லாமாபாத்,ஜன.14

**காஷ்மீரில் நடப்பது ஒரு சுதந்திரப் போராட்டம் என்று பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் வலியுறுத்தினார். அதேசமயம், காஷ்மீரத் தீவிரவாத இயக்கங்கள் இரண்டை பாகிஸ்தானில் தடைசெய்வதாகவும் மதரஸாக்களுக்கு கட்டுப்பாடு விதிப்பதாகவும் அவர் அறிவித்தார்.**

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான பாகிஸ்தானின் நடவடிக்கைகள் குறித்து நேற்றுமுன்தினம் இரவு நாட்டு மக்களுக்கு அதிபர் முஷாரப் தொலைக்காட்சியில் உரையாற்றினார்.

'காஷ்மீரில் நடப்பது பயங்கரவாதமல்ல. அது ஒரு சுதந்திரப் போராட்டம்' என்று அப்போது வலியுறுத்திய முஷாரப், இந்த நிலையிலிருந்து தாம் ஒருபோதும் விலகப்போவதில்லை என்று வலியுறுத்தினார். காஷ்மீர் போராட்டத்துக்கு அரசியல், பொருளாதார உதவிகளை பாகிஸ்தான் தொடர்ந்து வழங்குமென்றும் அவர் உறுதி தெரிவித்தார்.

அதேவேளை, இந்திய நாடாளுமன்றத்தின் மீது நடந்த தாக்குதல்களுக்கு காரணமானவை எனக் கூறப்படும் காஷ்மீரத் தீவிரவாத இயக்கங்களான லஸ்கர்-இ-தொய்பா, ஜெய்ஸி மொஹமட் ஆகிய இரண்டையும் பாகிஸ்தானில் தடை செய்வதாகவும் அவர் அறிவித்தார்.

முஷாரப் மேலும் தெரிவித்ததாவது:-

காஷ்மீர்ப் பிரச்சினையைப் பயன்படுத்தி எந்த ஓர் அமைப்பும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதை பாகிஸ்தான் இனிமேல் அனுமதிக்காது. பாகிஸ்தானியர்கள் எவரும் இந்தியாவுக்குள்ளோ அல்லது வேறு நாடுகளுக்குள்ளோ ஊடுருவ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அதேநேரம், இந்தியா வழங்கிய பயங்கரவாதிகளின் பட்டியலில் உள்ள 20 தீவிரவாதிகளில் எவராவது பாகிஸ்தானில் இருந்தாலும், அவர்களை இந்தியாவிடம் ஒப்படைக்கமுடியாது.



அவர்களில் எவரேனும் இந்தியாவில் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் தரப்படுமேயானால, அதனடிப்படையில் பாகிஸ்தானிய சட்டங்களின்படி அவர்கள் மீது பாகிஸ்தானிலேயே நடவடிக்கை எடுக்கப்படும். காஷ்மீர்ப் பிரச்சினைக்கு பேச்சின் மூலமே தீர்வுகாணமுடியும்.

- இவ்வாறு முஷாரப் தெரிவித்தார்.

தீவிரவாதத்தை பயிற்றுவிப்பதில் முக்கிய பங்காற்றுவதாகக் கூறப்படும 'மதரஸாக்கள்' என்ற இஸ்லாமியச் சமயக் கல்விக் கூடங்களை நடத்துவதற்கு புதிய நெறிமுறைகளை அதிபர் முஷாரப் அறிவித்தார். மதரஸாக்களில் தீவிரவாதத்தை பயிற்றுவிக்கக் கூடாது என்று எச்சரித்த அவர் -

மார்ச் 21ஆம் திகதிக்கு முன்னதாக அனைத்து மதரஸாக்களும் பதிவு செய்யப்படவேண்டும் என்றும்-

புதிய மதரஸாக்கள் எதுவும் அனுமதியின்றித் தொடங்கக்கூடாதென்றும் - அறிவித்தார்.

கடந்த ஒரு மாதகாலமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர்ப் பதற்றம் நிலவும் நிலையில் முஷாரப்பின் இந்தப் பேச்சு பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-6)

## அத்வானி கருத்து

புதுடில்லி,ஜன.14

பயங்கரவாதத்தை ஒடுக்க பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பொறுத்தே பயங்கரவாதத்துக்கு எதிரான அவரது உண்மையான நிலைப்பாட்டைக் கணிக்கமுடியும் என்று இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி கூறினார்.

நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வெறுமனே கூறினால் போதாதென்றும் -

பாகிஸ்தான்மீது இந்தியர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் முஷாரப் நடவடிக்கைகளை செயற்படுத்தவேண்டுமென்றும் - அத்வானி மேலும் கூறினார்.

## அதிபரின் உரைக்கு உலக நாடுகள் வரவேற்பு

வாஷிங்ரன்,ஜன.14

பயங்கரவாதத்துக்கு எதிரான பாகிஸ்தானின் நடவடிக்கைகள் குறித்து அதிபர் முஷாரப் ஆற்றிய உரைக்கு அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், ஸ்பெயின் உட்பட பல நாடுகளும் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

(ஒ-6)

## அ.தி.மு.கவுக்கு ஆதரவில்லை

புதுடில்லி,ஜன.14

தமிழகத்தில் அடுத்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள 3 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் அ.தி.மு.கவுக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்று அதன் தோழமைக் கட்சியாக இருந்த தமிழ் மாநில காங்கிரஸ் தெரிவித்து விட்டது.

## கொலம்பியாவில் அமைதி முயற்சி ஸ்தம்பிதம்

கொலம்பியாவில் கிளர்ச்சியாளர்கள் விடுத்த பேச்சுக்கான அழைப்பை அதிபர் அன்ரஸ் பஸ்ரானா நிராகரித்தார். இதனையடுத்து கொலம்பியாவில் சமாதான நடவடிக்கைகள் தகர்ந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

# சிம்பாப்வே தேர்தல் கண்காணிப்பு; ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தடை!

ஹராரே,ஜன.14

சிம்பாப்வேயில் இடம்பெறும் தேர்தலை எவரும் கண்காணிக்கத் தேவையில்லை; வேண்டுமானால் அவர்கள் பார்வையாளராக இருக்கலாம்.

சிம்பாவே வெளியுறவு அமைச்சர் ஸ்டனிஸ்லவ் முடேன்ஜ் இவ்வாறு உறுதிபடக் கூறினார்.

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள சிம்பாவே அதிபர் பதவிக்கான தேர்தலின்போது தனது பிரதிநிதிகளை தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தி வருகிறது.

இது தொடர்பாக சிம்பாப்வே அரசுடன் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தினர். இந்த ஒரு நாள் பேச்சில் கலந்துகொண்ட பின்னர் பேசிய முடேன்ஜ் -

தேர்தலில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே கலந்துகொள்ளலாம். கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட அனுமதிக்கமுடியாது என்றும் -

பார்வையாளர்களாக கலந்துகொள்ளும்படி விரைவில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உத்தியோகபூர்வ அழைப்பு அனுப்பப்படும் என்றும் - தெரிவித்தார்.

சிப்பாப்வேயில் மார்ச் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தச் சமயத்தில் அங்கு தேர்தல் வன்முறைகளை தடுத்து நிறுத்தி, வேட்பாளர்கள் அனைவரும் சுதந்திரமாகப் பிரசாரம் செய்ய உறுதியான நடவடிக்கை எடுக்கும்படியும் -

தேர்தலின்போது வெளிநாட்டு ஊடகங்களையும், சர்வதேச கண்காணிப்பாளர்களையும் அனுமதிக்கும்படியும் -

சிம்பாப்வே அரசிடம் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கைத் தொனியில் வலியுறுத்தியுள்ளது.

ஆனால் இந்தக் கோரிக்கைகளை நிராகரித்த வெளியுறவு அமைச்சர் முடேன்ஜ், தற்போதைய அதிபர் ரொபேர்ட் முகாபேயைப் பதவியில் இருந்து அகற்றிவிட பிரிட்டிஷ் அரசு முயற்சிப்பதாக நேரடிக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

பார்வையாளர்கள் தேர்தல் நடைமுறையை பார்வையிட மட்டுமே முடியுமென்றும் -

ஆனால் கண்காணிப்பாளர்களால வாக்களிப்பு மோசடிகளை தடுத்து நிறுத்த முடியுமென்றும் -

ஐரோப்பிய ஒன்றியம் கருதுகிறது.

அதிபர் முகாபேயின் ஆட்சிக் காலத்தில் சிம்பாப்வேயில் வசிக்கும் வெள்ளை இனத்தவர்களுக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# போதையின் பிடியில் பிரிட்டிஷ் இளவரசர்!

## அதிர்ச்சியில் அரச குடும்பம்

லண்டன்,ஜன.14



இளவரசர் ஹரி

பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் - மறைந்த டயானா தம்பதியின் இளைய மகனான இளவரசர் ஹரி (வயது 17) போதை மருந்து மற்றும் மதுப்பழக்கங்களில் இருந்து விடுபடுவதற்காக போதைப் பொருள் பாவிப்போர் மறுவாழ்வு மையம் ஒன்றில் சேர்க்கப்பட்டார். இதனால் பிரிட்டிஷ் அரச குடும்பம் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இளவரசர் சாள்ஸும், அவருடைய இரு மகன்களும் 'ஹைகிரோவ்' பண்ணை வீட்டில் வசித்து வந்தனர். தந்தை சாள்ஸும் அண்ணன் வில்லியமும் பெரும்பாலான நேரங்களில் வேறு ஊர்களில் தங்கிவிட நேர்வதால், ஹரி தனிமையில் விடப்பட்டான். தந்தையுடன் தாய் டயானாவுக்கு ஏற்பட்ட பிரிவும், பின்னர் நிகழ்ந்த அவரது மரணமும் ஹரியை மிகவும் பாதித்ததாகக் கூறப்படுகிறது.

இதனால் பண்ணை வீட்டின் சமீபமாக இருந்த 'ரட்டில்போன் இன்' என்ற ஹோட்டலுக்கு நண்பர்களுடன் செல்ல ஆரம்பித்த ஹரி அங்கு போதைப்பொருள் மற்றும் மதுவைப் பயன்படுத்தத்தொடங்கியதாகவும் -



'ரட்டில்போன் இன்' ஹோட்டல்

கடந்த ஆண்டு தனது 16ஆவது வயதில் 'ரட்டில்போன் இன்' ஹோட்டலுக்குச் செல்ல ஆரம்பித்த ஹரி ஒரு வருடத்திலேயே அவற்றுக்கு அடிமையாகிவிட்டதாகவும் - கூறப்படுகிறது.

இறுதியாகத் தமது பண்ணை வீட்டிலேயே ஹரி போதையில் விழுந்து கிடக்கத் தொடங்கிய பின்னரேயே கவலை கொண்ட சாள்ஸ் புனர்வாழ்வு மையத்தில் ஹரியைச் சேர்த்துள்ளார்.

அரச குடும்பத்தில் பிறந்தபோதும் பெற்றோரின் அரவணைப்பு கிடைக்காததாலேயே ஹரி இந்த நிலைக்கு ஆளாகியதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதி வருகின்றன.

தனது காதலை மறைத்து, டயானாவை மணந்து, அவருடைய வாழ்க்கையையும் பாழடித்து, இப்போது பழைய காதலியான கமீலா பாக்கருடன் உறவை வளர்க்கும் சாள்ஸ்தான் ஹரியின் இந்த நிலைமைக்குக் காரணம் என்றும் பத்திரிகைகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

(ஒ)


தை மாதம் பிறந்திட புதிய பொலிவுடன்

ஹில்ஸ் கலர் போட்டோ

இலவசம் 5"x7" புகைப்படம்

* நவீன கணனி முறையில் தரமான புகைப்படப் பிரதிகள்
* கடவுச்சீட்டு/விசா படங்கள் ~ உடனடிச் சேவை
* லெமினேட் செய்த வண்ணப்பட அட்டையுடன் கூடிய அல்பம்
* துரித சேவை ~ வாடிக்கையாளர் திருப்தி

இவற்றுடன் இந்தியாவில் நடைபெறும் உங்கள் இல்லத் திருமணங்களுக்கான சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும்

* குளிரூட்டப்பட்ட மண்டபம்
* இலங்கை முறையிலான திருமண ஒழுங்குகள்
* வீடு/வாகன வசதிகள்
* பிரயாண ஏற்பாடுகள்
* புகைப்படம்/வீடியோ

தொடர்பு கொள்க:

Hills COLOR FOTO (PVT) LTD.,

ஹில்ஸ் கலர் போட்டோ (பிரை) லிமிடெட்,

298~1/4, காலி வீதி,

வெள்ளவத்தை, கொழும்பு ~ 06

தொலைபேசி: 508430, தொலைநகல்: 599238

மின்னஞ்சல்: hills@slt.lk

(C/20291)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## நூல் விற்பனை

ஸாஸ்த்தா சகஸ்ரம் த்ரீஸதி - அஷ்டோத்திரம் அடங்கிய நூல் (கிரந்தத்தில்) விரைவில் வெளி வரவுள்ளது. (97051)

## A/L பொருளியல்

A/L பொருளியல் நூல்களான பொருளாதார வளர்ச்சி, வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், பணம், சர்வதேச வர்த்தகம், நாணய மாற்றுவீதம் போன்றன விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (97021)

## ஆங்கிலம்

தரம் 9,10,A/L 2003, 2004 வகுப்புகளுக்கான ஆங்கில வகுப்புகள் 18.01.2002இல் ஆரம்பம். க.நாகேந்திரம், இல.34/4, செட்டித் தெரு, நல்லூர். (96891)

## NEW MATHS

புதிய, பழைய பாடத்திட்டத்துக்கமைய 37 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குளி. (96969)

## பயிற்சி வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் தையல், தலை அலங்காரம், கேக் ஐசிங் ஆகிய பயிற்சி வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பம்: 14-01-2002 1.30க்கு (புதிய நேரம்) அதற்கு முன் பதிவு செய்யவும். S.கீர்த்தனா, சிவன் கோயிலடி, மயிலணி, சுன்னாகம். (96520)

## தவறிவிட்டது

மீசாலை தெற்கு, மீசாலையைச் சேர்ந்த செல்வரத்தினம் செல்வலோஜினியின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை (இல.091034123), கைமணிக்கூடு யாழ். அரசினர் வைத்தியசாலையில் 05.01.2002 அன்று பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் செலஸ்ரியன்றேமன் கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (97068)

கோப்பாய் தெற்கு, டச் றோட், கல்வியங்காடு என்ற முகவரியைச் சேர்ந்த த.கார்த்திகேசுவின் தேசிய அ.அட்டையும் (இல.281871285V), விசேட அடையாள அட்டையும் திருநெல்வேலிக்கும் இராமசாமிப் பரியாரியாரின வீட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் G.S.J/259 கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கவும். (97062)

இல.17/1, இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லையா அருணாசலம் என்பவரின தேசிய அடையாள அட்டை (இல. 271063318V), விசேட அடையாள அட்டை (இல.09104292) ஆகியன செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சந்நிதி முருகன் ஆலயப் பூசகரிடம் ஒப்படைக்கவும். (97063)

## இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளை அச்சுவேலியில்!

யாழ்ப்பாணம்,ஜன.14

இதுவரைகாலமும் யாழ்நகரில் இயங்கிவந்த இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை நாளை செவ்வாய்க்கிழமை முதல் வல்லை வீதி அச்சுவேலியில் உள்ள கட்டடம் ஒன்றுக்குத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வங்கியின் யாழ்.பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார். (க-4)


## விற்பனைக்கு

புதிய (குளிரூட்டி)
HAIER
(BOTTLE COOLER)
உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
குணரஞ்சன்
சம்பந்தன் மெடிக்கல் கிளினிக்,
No 22,
இராமையா செட்டியார் லேன்,
யாழ்ப்பாணம்.
பார்வையிடும் நேரம்:-
9 a.m - 2 p.m
(97067)


# வயாவிளான் ம.வியை பழைய இடத்தில் இயங்கவைக்க நடவடிக்கை எடுங்கள்!

## அமைச்சர் ஜயலத்திடம் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை மீண்டும் பழைய இடத்தில் இயக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரும் மகஜர் ஒன்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராயில் இயங்கும் மேற்படி பாடசாலைக்கு அமைச்சர் நேற்று விஜயம் செய்தபோது இது குறித்த மகஜர் அவரிடம் நேரில் கையளிக்கப்பட்டது.

இந்து விவகார அமைச்சர் தி. மகேஸ்வரன், வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மொஹமட் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளும் அமைச்சர் ஜயலத்துடன் சென்றிருந்தனர். (க-7)

## மந்திகைக்கு புதிய மகப்பேற்று நிபுணர்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எம்.எஸ்.எவ். நிறுவனத்தைச் சேர்ந்த புதிய மகப்பேற்று நிபுணர் வந்துள்ளார்.

இங்கு கடமையாற்றிய மகப்பேற்று நிபுணர் தமது சொந்த இடத்திற்குச் சென்றதையடுத்து ஒன்றரை மாதங்களின் பின்னர் புதிய மகப்பேற்று நிபுணர் நேற்று முன்தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (க-117)


## திகதி மாற்ற அறிவித்தல்

வலி. மேற்கு, பிரதேச சபை உபஅலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் இன்று (14-01-2002) திங்கட்கிழமை நடத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு எதிர்வரும் (14-04-2002) இல் புதுவருடப் பிறப்பன்று நடத்தப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

கு.சண்முகரத்தினம்
தலைவர்
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
உபஅலுவலகம், சங்கானை.

(97065)

அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

# பொங்கல் கலைப் பொழுது

காலம்:- இன்று 14.01.2002 திங்கட்கிழமை

☆ காலையில் -

▲ 5.30-7.30 மணி - பொங்கலும் வழிபாடும்
▲ 8.30 மணி - பட்டிமன்றம்

பொருள்: "இன்றைய இளைஞர்களின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு காரணம்" பெற்றோரா?.... சமூகமா?

☆ மாலையில் -

▲ 5.30 மணி - கருத்தாடல்

பொருள்: 'அமைதியின் தேவை' (பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள்)

▲ 6.15 மணி - கலைநிகழ்ச்சிகள்

- நடனம்
- கவியரங்கம் பொருள்:- 'காயங்கள் ஆறாதோ....'
- இசைக்கச்சேரி
- சிறுவர் நாடகம் - "ஒன்றாகில் நன்றாகும்"

**இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☆ நாளை 15.01.2002 செவ்வாய்க்கிழமைமுதல் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இயங்கும் அனைத்து திருமறைக் கலாமன்றங்களினதும் கலை, கலாசார, அரங்கு சார்ந்த செயற்பாடுகளை இணையத்தில் கண்டுகளிக்கலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது இணைய முகவரி: www.cpateam.org

238,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி:021-2393

- திருமறைக் கலாமன்றம்

(C-20282)


## முதலாம் வருட நினைவஞ்சலி



பிறப்பு 05 . 04 . 1924

இறப்பு 26 . 01 . 2001

### திருமதி துரைசாமி மாணிக்கரெத்தினம்

(வல்வெட்டித்துறை)

அம்மா! நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதைவிட்டு மறையவே மறையாது!

ஓம் சாந்தி!

நாளை (15.01.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள திவச நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

R.நேசரத்தினம் (கிளி)
அரசடி, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை.

கணவர், பிள்ளைகள்.

(97069)

# கல்விச்சாலைக் காட்சிகள்



அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் அண்மையில் வருடாந்தப் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தம்பதிகள் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டனர். திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை மங்களவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் திருமதி கோ.அம்பலவாணர், உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.செல்லையா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஐ)



மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க.வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ - இஸ்லாமிய துறைத் தலைவர் அருட்தந்தை அன்ரன் மத்தாயஸ் அடிகளார் மங்களவிளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் சங்.சகோதரி மே.த.லூட்ஸ் லாஸ் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)



யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வின் போது இடம்பெற்ற மாணவிகளின் நடன நிகழ்ச்சியில் ஒரு காட்சியை படத்தில் காணலாம். (ஐ-51)



35 வருட ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிச் செல்லும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பிரதி அதிபர் செல்வி தனம் வேலுப்பிள்ளையின் சேவையைப் பாராட்டி அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாணவி செல்வி ஜெயந்தி வேலும்மயிலும் இளைப்பாறிச் செல்லும் பிரதி அதிபருக்கு பாராட்டுப்பத்திரத்தை கையளிப்பதை படத்தில் காணலாம். (படம்: வடமராட்சி செய்தியாளர்)

## உதயன்

# தை பிறந்தது; வழி பிறக்குமா......?

இன்று தைப்பொங்கல்; தமிழர் திருநாள். உழவர் பெருமக்கள் - விவசாயப் பெருங்குடியினர் - தமது உழைப்புக்கு உறுதுணையாக விளங்கிய உதயனுக்குப் பொங்கலிட்டு நன்றிகூறும் நன்னாள் இது.

உலகம் உய்ய உறுதுணையாக இருப்போரைப் போற்றும் நம் தமிழர், தரணி முழுவதும் இயற்கை வடிவாக விளங்கி சக்தியை வாரிவழங்கும் உதயனுக்கும், ஈர நெஞ்சுடை உழவனுக்கும், பயன் பலதரும் பசுவினத்துக்கும் விழா எடுத்து நன்றி தெரிவிகத் தேர்ந்தெடுத்த திருநாளே இது.

கார் பார்த்து, களத்துமேட்டில் எருதுபூட்டி, ஏரோட்டி, நீரூற்றி, சேற்று வயலாடி, நாற்று நட்டு, களை பிடுங்கி, களனி போற்றி, மாடு கட்டிப் போரடித்து நாநிலம் வாழ வழி செய்த நம் உழவர் பெருமக்களின் உவப்புறு நாள் இது.

"உழவன் உலகத்தாருக்கு அச்சாணி" என்கின்ற வள்ளுவர் வாக்குக்கேற்ப தமிழர் பாரம்பரிய வாழ்க்கை முறையின் அச்சாணியாக அமைந்தது உழவுத் தொழில். அதன் விளைவு வீட்டுக்குக் கிடைப்பது தைத் திங்களில்தான். அத்திங்கள் தமிழ்ச் சமுதாயத்திற்கே உவகை தரும் மாதமாகும். இதனால் தைத் திங்கள் முழுவதையுமே தமிழ் பாரம்பரிய நிகழ்வுகளை நடத்தி மன உவகைதரும் சம்பிரதாய வைபவங்களில் ஈடுபட்டனர் நம் முன்னோர்.

அறுவடைத் திருநாளாகிய தைப் பொங்கல் உழவர் திருநாள் மட்டுமல்ல; உழைப்புத் திருநாளும்கூட.

கடந்த பல ஆண்டுகளாக அல்லலுற்று, உயிர்த் தியாகம் செய்து, இரத்தம் சிந்தி, இழப்புக்களைச் சந்தித்து, மடிந்து வதங்கியும் மண்டியிடாமல் சுதந்திர வேட்கைக்காக உழைத்த தமிழ் மறவரின் உழைப்புக்கும் பயன் கிட்டுவதற்கு கால்கோள் இடப்பட்டிருக்கின்றது.

போரின் நலிவாலும், இழப்புகளாலும் நொடித்துப்போயிருக்கும் தமிழ் சமுதாயத்திற்கு 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற வாக்கிற்கு ஏற்ப அமைதிப் புறா சிறகடித்துவரச் சமாதான ஒளிக்கீற்றுத் தோன்றும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கின்றது.

கடந்த பல வருடங்களோடு ஒப்பிடும்போது இந்தத் தைத் திங்கள் ஈழத் தமிழர்களுக்கு அதிக நம்பிக்கையையும், தைரியத்தையும் ஊட்டி பெரும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

எனினும் -

அறுவடை கொட்டும் இந்தத் திருநாளில் நம் ஊரில் பொருள் தட்டுப்பாடு; பற்றாக்குறை; விலையேற்றம்.

சக்தியின் மூலவளமான சூரியனைப் போற்றும் இந்த நன்னாளில் மாற்று சக்தி வளமான எரிபொருளுக்குப் பெரும் கிராக்கி; விலை உயர்வு. மின்சக்திக்கோ பெருவெட்டு.

அன்றாட வாழ்வுக்கான இந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஈழத் தமிழர் மனம் தளராமல் நம்பிக்கையோடு - தையோடு வழி பிறக்கும் என்ற தைரியத்தோடு - காத்திருக்கின்றார்கள்.

யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி, இயற்கை அனர்த்தங்களால் அல்லற்பட்டு பெரிதும் வாட்டமுற்றிருக்கும் நமது வன்னி வாழ் சகோதரர்களின் வாழ்விலும் தைப்பொங்கலோடு சிறிது இடர் களையும் வாய்ப்புக் கிட்டியிருப்பது நமக்குப் பெரும் மகிழ்வைத் தருகின்றது. அவர்களது அன்றாட வாழ்விற்கு அவசியமான - அத்தியாவசியமான - பொருள்கள்மீது தடை விதித்ததன் மூலம் அவர்களது வாழ்வையே அவலத்துக்குட்படுத்தி வந்த சிங்களப் பேரினவாத அரசு, தனது பயங்கரமான - கொடூர - பிடியைச் சற்றுத் தளர்த்துவதற்குப் பொங்கலோடு வாய்ப்புக் கிட்டியிருப்பது வன்னி மக்களுக்கும் அவர்களோடு சேர்ந்து அவர்களது இரத்தத்தின் இரத்தமான எங்களுக்கும் சற்று மன நிம்மதியைத் தருகின்றது.

இன்று நம் இல்லங்களில் - இல்லத்தின் முற்றங்களில் - பால் பொங்கும். அடுப்பு வெக்கையில், உழவனின் உழைப்பு நமக்குப படையலாகக கிடைக்கும்.

ஆனால் நம் மனங்களில் உவகை பொங்குமா? ஈழத் தமிழ் மறவர்களின விடுதலை வேட்கையிலே அவர்களது உழைப்புக்குப் பலன்கிட்டுமா?

தைப்பிறப்போடு அதற்கு வழி பிறக்குமென்று நம்பிக்கை கொள்வோமாக!

# அமைச்சர்கள் வரும்போது மட்டும் குப்பைகளை அகற்றினால் போதுமா?

## யாழ்.மாநகர சபையிடம் கேட்கிறார் உறுப்பினர்

யாழ்ப்பாணம்,ஜன.14

தென்பகுதியிலிருந்து அமைச்சர்கள் வரும்போது மட்டும் குப்பை கூளங்களை அகற்றி சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொண்டால் மட்டும் போதுமா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் யாழ்மாநகர சபை உறுப்பினர் (புளொட்) மு.தவநாதன்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டங்களின்போது மக்களின் குறைகளையும் தேவைகளையும் நிறைவேற்றுவதற்குத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டும் அவை சபை நிர்வாகத்தினால் புறக்கணிக்கப்பட்டும், தாமதப் படுத்தப்பட்டுமே வந்திருக்கின்றன.

இராணுவ முகாம்கள், பொலீஸ் நிலையங்கள், பாதுகாப்பரண்கள், சோதனைச் சாவடிகள் என்பன அமைந்திருக்கும் பகுதிகளைக் காரணங்காட்டி ஏனைய பகுதிகளிலும் சுத்திகரிப்பு வேலைகள், நகர அபிவிருத்தி வேலைகளில் அக்கறை இல்லாது மாநகர சபை நிர்வாகம் செயற்படுகின்றது.

தென்பகுதியிலிருந்து அமைச்சர்களோ உயர் அதிகாரிகளோ வரும் சந்தர்ப்பங்களில் மட்டும் தமது செயற்பாட்டை காட்டுவதற்காக சுத்திகரிப்பு மற்றும் குப்பைகூளங்களை அகற்றுதல் போன்ற பணிகளுக்கு விடுமுறை நாள்களிலும் கூட தொழிலாளர்களைப் பயன்படுத்தி வருகின்றது மாநகர சபை நிர்வாகம்.

ஆனால், மாநகர சபைக்கு வரி, வாடகை என்பவற்றைச் செலுத்தி வருமானத்தைத் தேடிக் கொடுக்கும் மக்களின் நலன்கள் மீது அக்கறையில்லாத தன்மையையே இது காட்டுகின்றது.

அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் விஜயம் செய்வது அப் பகுதி மக்களின் குறைகளை நேரில் பார்த்தும் கேட்டும் அறிவதற்காகவே.

அவர்களை வரவேற்று கௌரவிப்பது மனித பண்பாகும். வருகை தரும் பகுதிகளில் உள்ள குறைபாடுகளையும் மக்கள் சேவையில் உள்ள நிர்வாகங்களின் குறைகளையும் அவர்களுக்கு எதுவித ஒளிவு மறைவுமின்றி எடுத்துக்காட்ட முன்வர வேண்டும்.

அதனை விடுத்து மக்களின் தேவைகளை புறக்கணித்து செயல்படுவது மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் நிர்வாகத்திற்கு உகந்ததல்ல - என்றுள்ளது. (க-4)

## குடும்பநல சேவையாளர்களுக்கு இடமாற்றம்

தென்மராட்சி,ஜன.14

யாழ்.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடமையாற்றிய குடும்பநல சேவையாளர்கள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, பருத்தித்துறை, கோப்பாய், மானிப்பாய், தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஐந்து வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய குடும்பநல சேவையாளர்களை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 குடும்பநல சேவையாளர்கள் ஏனைய பிரிவுகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகப் பதில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ந.ஞானசுதன் தெரிவித்தார். (ஜ-117)

## தப்பிப் பிழைத்தது குழந்தை!

தென்மராட்சி,ஜன.14

சைக்கிள் கூடைக்குள் இருந்து தூக்கி வீசப்பட்ட ஒருவயதுக் குழந்தை அருகில் உள்ள கிணற்றில் வீழ்ந்து அயலவர்களால் காப்பாற்றப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் கரவெட்டி கீரிப்பல்லு என்னும் இடத்தில் இடம்பெற்றது.

காப்பாற்றப்பட்ட கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவராஜசிங்கம் ஆர்த்திகன் என்ற அந்தக் குழந்தை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இக்குழந்தையைத் தனியார் வைத்தியசாலைக்கு தோட்டக் காணியூடாகச் சைக்கிளில் கொண்டு சென்றவேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

### நாளை

தை 2
செவ்வாய்க்கிழமை
(15-01-2002)
திதி : துதியை
முன்னிரவு 9.48 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
மாலை 5.47 வரை.
கரிநாள்
சுபநேரம் : 11.04 - 12.34
ராகுகாலம் : 3.34 - 5.04
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

### தையலார் வாழ்த்த தை அவள் வந்தாளின்று!

தையே! வாடி! அம்மா
தனிஎழில் தங்கப் பாவாய்.
வையவே விடிவு கிட்டும்
பாங்கொன்று தெரியுதடி
மைவிழி மாதர் எல்லாம்
மனதினில் உவகை பொங்க
வையகம் வியக்கும் சேயோன்
வரவினை வாழ்த்தி நின்றார்
கையினால் பொங்கல் பொங்கி
களிப்புடன் படைத்தார் அன்றோ
வெய்யவா! இவற்றை ஏற்று
வேகமாய் கயிலை நண்ணி
தையலார் வேண்டுகோள் அனைத்து
தந்திடு சிவனார்க்கு இன்று!
வையவே உமையாள் காதில்
பரிவுடன் எம்நிலையை செப்பு.

- *விகடகவி.*

## தேர்தல்வேளையில் குத்தப்பட்ட 'கறுப்பு முத்திரை'

# புறநிலை செயற்பாடுகளிலேயே கூடிய அக்கறை காட்டுகின்றனர் யாழ்.பல்கலை மாணவர்கள்!

### புதிய பீடாதிபதி கௌரவிப்பு விழாவில் பேராசிரியர் உரை

யாழ்ப்பாணம்,ஜன.14

இன்று பல்கலைக்கழக மாணவர்கள் கற்றலைவிட புறநிலை செயற்பாடுகளிலேயே கூடிய அக்கறை செலுத்துகின்றனர். இந்த நிலை மாறி மாணவர்கள் கல்வியில் அதிக ஈடுபாடு காட்டவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவரும் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் புதிய பீடாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரை கௌரவித்துக் கடந்த புதன்கிழமை நடைபெற்ற வரவேற்பு மகிழ் விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கலைப்பீட மூன்றாம் வருடப் பிரதிநிதி ச.சுசிகரன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழினத்தின் சுய நிர்ணயம், மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் பற்றிக் குறிப்பிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு கோரும் மாணவர்கள் தாமும் சமூகநலனில் அக்கறை கொண்டு செயற்படவேண்டும்.

#### பல்கலை மாணவருக்கு 'கறுப்பு முத்திரை'

அண்மையில் நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் பல்கலைக்கழக மாணவர்களும் கள்ள வாக்குப் போட்டார்கள் என்ற 'கறுப்பு முத்திரை' குத்தப்பட்டுள்ளது. இத்தகைய அவப்பெயர் தரக்கூடிய - சத்தியத்திற்குப் புறம்பான செயல்களில் - மாணவர்கள் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

இன்று தமிழ்ச் சமுதாயம் ஒழுக்க நெறிகளில் நின்று பிறழ்வதுடன் பண்பாட்டுச் சீர்கேடுகளும் அதிகரித்துள்ளன. இந்த நிலையை மாற்ற வேண்டியது பல்கலைக்கழக மாணவர் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

பல்கலைக்கழகக் கல்விச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் அறிவாற்றல் மிக்கவர்களாகத் திகழவேண்டும்.

பட்டத்துக்காக மட்டுமே படிப்பது என்ற தவறான எண்ணம் இன்றைய மாணவர்கள் மத்தியில் ஆழமாகப் பாதித்திருக்கின்றது. அந்த நிலை மாறிக் கல்வி என்பது தனிமனிதனின் ஆளுமையை வளர்த்துக்கொள்வதுடன் சமூகத்துக்கும் நிறைவான சேவையை வழங்கவேண்டும் - என்றார்.

#### துணைவேந்தர் உரை

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தமதுரையில் :-

கலைப்பிரிவில் தற்பொழுது பல புதிய கற்கைநெறிகள் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் சிறந்த முறையில் வளர்த்தெடுக்க வேண்டியது புதிய கலைப் பீடாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயரின் கடமையாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்திலேயே அதிகூடிய மாணவர்கள் கல்வி கற்கின்றனர். கலைப்பீடத்திலேயே அதிகளவான வறிய மாணவர்களும் கல்விகற்கின்றனர்.

ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் பெரும்பாலும் இரண்டாம்தர, மூன்றாம்தரக் கல்விப் பாரம்பரியங்களைச் சேர்ந்தவர்கள். ஆனால் கலைப்பீட மாணவர்களில் பெரும்பாலானோர் முதலாந்தரக் கல்விப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். இத்தகைய சகல பிரச்சினைகளையும் கவனத்திற்கொண்டு சிறப்பாகக் கடமையாற்றக்கூடிய ஒருவராகப் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் விளங்கிறார்.

#### கலைத்துறையினரே முன்னணியில்!

மேலும் இன்று உலகத்தில் சகல துறைகளிலும் முன்னணியில் திகழ்பவர்களும், நிர்வாக அதிகாரம் மிக்கவர்களாக விளங்குபவர்களும் கலைத்துறையைச் சோந்தவர்கள் - சமூகத்துடன் ஒன்றிப்பவர்களும் இவர்களே. ஆதலினால் தமது பெறுமதியை உணர்ந்து மாணவர்கள் ஒவ்வொருவரும் சிறப்பாகக் கற்று சமூகத்தில் முன்னிலைக்கு வரவேண்டும்.

உண்மையான அன்புடன் பீடாதிபதிகளை நீங்கள் வரவேற்பதாக இருப்பின் அவருடன் இணைந்து மாணவர்களும் விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் பீடாதிபதிக்கு மிகுந்த ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

1985இற்கு முன் கொழும்பில் சகல நிர்வாகத்தின் முக்கிய பொறுப்புக்களும் யாழ்ப்பாணத்தவர்களிடம் இருந்தது. லீவு நாள்களில் கொழும்பில் நிர்வாகிகள் யாழ். வந்துவிடுவர். இதனால் கொழும்பில் எந்த உயர் அதிகாரிகளையும் காண முடியாது. அத்தகைய ஒரு சிறப்பான ஆற்றல்மிக்க சமுதாயம் இருந்த காலம் மீண்டும் உருவாக வேண்டும்.

#### யாழ்.மாணவர்களுக்கு பெரும் மதிப்பு!

எமது பல்கலைக்கழகத்திற்கு வேறு நாட்டில் இருந்துவந்து கல்வி கற்கும் நிலை தோன்றவேண்டும். யாழ்ப்பாண மாணவர்களுக்கு உலகெங்கிலும் பெரும் மதிப்புள்ளது. கனடா, லண்டன் முதலான நாடுகளில் அதிகளவு தமிழ் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்கள் இங்கு வந்து பட்டம்பெறும் நிலை உருவாகவேண்டும்.

இன்று இந்தியாவில் ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் நான்கு விரிவுரையாளர்கள் மேற்படிப்பைத் தொடர்கின்றனர். இத்தகைய விடயங்கள் தொடரவேண்டும். எமது பல்கலைக்கழகம் மேலும் வளரப் புதிய பீடாதிபதி மேலும் முயற்சிகளை எடுக்கவேண்டும் - என்றார். (க-4-ரி)

### உதயவாக்கு

தாம் சொல்லும் அனைத்தையும் மற்றவர்கள் நம்பிவிடுகிறார்கள் என்று நம்புகிறவர்கள் இறுதியில் எவருடைய நம்பிக்கையையும் பெறமுடியாதவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

# குடத்தனை, அம்பன் பகுதிகளில் மூளைமலேரியா நோய் பாதிப்பு

வடமராட்சி கிழக்கு,ஜன.14

வடமராட்சி கிழக்கு குடத்தனை, அம்பன் பகுதிகளில் மூளைமலேரியா நோய்ப் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குடத்தனையில் 7 பேருக்கும், அம்பனில் 7 பேருக்கும் இந்த நோய் இருப்பது இரத்த பரிசோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த வருடம் இந்தநோய் பரவாமலிருப்பதற்கு சுகாதாரத் திணைக்களம் அதிக பிரயத்தனத்தை மேற்கொண்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தது.

அண்மையில் பெய்த மழையினால் தாழ்வான நிலங்களில் மழை நீர் தேங்கிக் காணப்படுவதால், இந்த நோய் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது.

மலேரியா தடுப்பு இயக்க உத்தியோகத்தர்கள் தற்போது அப்பகுதியில் இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு நோய் காணப்படுபவர்களுக்கு மலேரியா தடுப்பு வில்லைகளை வழங்கி வருகின்றார்கள். (க-182)

# மக்கள் அதிகம் கூடும் இடங்களில் மிதிவெடி விழிப்புணர்வுத் தட்டிகள்

சாவகச்சேரி,ஜன.14

தென்மராட்சிப் பகுதியில் இராணுவ நடவடிக்கை நடைபெற்ற இடங்களில் மீளக்குடியமரும் பொதுமக்கள் மத்தியில் மிதிவெடி மற்றும் வெடிபொருள்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், யுனிசெவ் உதவித் திட்டத்தின் அனுசரணையுடன் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பெரியளவிலான விளம்பரத் தட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

வரணி சந்தை முன்பு, கொடிகாமம் சந்தி, சரசாலை(கனகன் புளியடிச் சந்தி), சாவகச்சேரி நகரம், நாவற்குழிச் சந்தி, கைதடிச் சந்தி, கோப்பாய்ச் சந்தி ஆகிய இடங்களில் - பெரியளவிலான எழுத்துக்களைக்கொண்ட - வெடிபொருள் தொடர்பான - வாசகமும், அதனை விளக்கும் பெரிய அளவிலான படங்களும் கொண்ட - தட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

(ம-31)

## நெஞ்சை விட்டகலாத
## நான்காவது வருட நினைவஞ்சலி

மலர்வு 25 - 01 - 1941



உதிர்வு 29 - 01 - 1998

**அமரர் காசிப்பிள்ளை யோகரத்தினம்**

(JAPAN)

**திதி: 14.01.2002**

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமானவரே!
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*750, பலாலி வீதி,*
*திருநெல்வேலி*

(96996)

*பிரிவால் துயருறும்*
**குடும்பத்தினர்.**

# திருமறைக் கலாமன்ற பொங்கல் தின நிகழ்வுகள்

பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் இன்று கலை நிகழ்வுகள் பல மேடையேற்றப்படவுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு "இன்றைய இளைஞர்களின் ஒழுக்கச சீர்கேட்டிற்குக் காரணம் பெற்றோரா?, சமூகமா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும்.

மாலை 5.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை நீமரியசேவியர் 'அமைதியின் தேவை' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். அதைத் தொடர்ந்து நடனம், கவியரங்கம், இசைக்கச்சேரி, சிறுவா நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்படும் என்று திருமறைக கலாமன்றம் அறிவித்துள்ளது.(க-6)

# படைநிலை அருகே இளைஞர்கள் நடமாட்டம்!

கொழும்பு,ஜன.14

நாகர்கோவில் முன்னரங்கப் பகுதியில் உள்ள இராணுவத்தின் கண்காணிப்பு மையத்தின் அருகே அடையாளம் தெரியாத மூன்று இளைஞர்கள் கடந்த வியாழக்கிழமை நடமாடியதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

மாலை 6.30 மணியளவில் அங்கு வந்த மூன்று இளைஞர்களும் தொலைத்தொடர்புக் கருவிகளை வைத்திருந்ததாகவும் -

இராணுவத்தினர் கேட்டுக்கொண்டதற்கு அமைய அவர்கள் பின்னர் அங்கிருந்து அகன்று சென்றதாகவும்-

தற்போது இராணுவக் கண்காணிப்பு மையத்தில் இருந்து சுமார் 25 மீற்றர்கள் தூரத்தில் அந்த இளைஞர்கள் நிலைகொண்டிருக்கக்கூடும் என்றும் -

மேலும் தெரிவிக்கப்பட்டது.(ஐ-ஒ)

## சாமியே சரணம்!

கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியில் அமைந்துள்ள
**அருள்மிகு சபரீச ஐயப்பன் திருக்கோயிலில்**
இன்று (14.01.2002) திங்கட்கிழமை மகரஜோதித் திருநாள்.

இன்று மாலை 4 மணிக்கு
**கோண்டாவில் கிழக்கு நர்த்தன விநாயகர் ஆலயத்தில்**
இருந்து மங்களவாத்திய சகிதமும் சரணகோஷத்துடனும் ஆபரணப் பெட்டி எடுக்கும் வைபவம் நடைபெறும். தொடர்ந்து அபிஷேகம், பூஜை, பஜனை 18ஆம் படி பூர்த்தி பூஜை என்பன நடைபெறும்.
அனைவரும் வருக.
*சாமியே சரணம்!*

*பரிபாலன சபை* (96970) உபயம் **பிரம்மஸ்ரீ குகதாசக் குருக்கள்.**

உ
ஸ்ரீ சிவஞான விநாயகன் துணை!

## பாராட்டி நன்றி கூறுகின்றோம்

**சங்குவேலி ஸ்ரீ சிவஞான விநாயகர் தேவஸ்தானம்**

எமது ஆலயத் திருப்பணி வேலைகளுக்கு என்று ஒதுக்கிய 2 லட்சம் ரூபாவில் ஒரு லட்சம் ரூபா நிதியை எமக்கு வழங்கியுதவியவர்களான -



**முன்னாள் அமைச்சர்**
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
**அவர்களுக்கும்**
**சுன்னாகம்**
**பிரதேச சபைத் தலைவர்**
**கமலசேகரன்**
**அவர்களுக்கும்**



**எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

(97039) **- ஆலய பரிபாலன சபை.**

எங்கள் வீட்டின் - எங்கள் குடும்பத்தின் - எங்கள் பயணத்துக்கு பஜாஜ் ஒன்றுதான்



**வீட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயணங்கள் உண்டு.**
அந்த போக்கு வரத்துக்காக வீணாகும் செலவையும், நேரத்தையும், களைப்பையும் குறைப்பதற்கும், அந்த செலவழியும் பணத்தையும் காலத்தையும் சேமித்து அதை எங்களின் குடும்ப முன்னேற்றத்துக்காக பயன்படுத்த எங்களின் பஜாஜ் வண்டியினால்தான் உதவ முடிந்தது.

பஜாஜ் முச்சக்கர வண்டி அன்றுபோல் இன்றும், இன்றுபோல் நாளையும் எங்களின் முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவ எங்களுடன் தொடர்ந்து இயங்கும் என்பது எங்களின் விசுவாசம்.

விலை ரூ. 187,350/-ல் இருந்து மேல் (GST உட்பட)



பஜாஜ் - எனது நண்பன்



பஜாஜ் - எனது கைஉதவியாளன்



பஜாஜ் - எனது மூத்தவன்



பஜாஜ் - எனது காவலன்

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
த. பெ. 1909, 75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ. பே: 074-700600, 687167, 687169, பக்ஸ்: 687175
பிரதேச கிளை அலுவலகங்கள்:
- 1748,கட்டுகஸ்த்தோட்டைவீதி, கண்டி. தொ. பே: 08-226146, 08-238133-5
- 27 E, வியாபார ஸ்தானம், தெகியத்தகண்டிய. தொ. பே: 027 50037
- 382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தொ. பே: 041-27488, 041-28488, 041-28999
- நீதல் மாவத்தை, அம்பாறை. தொ. பே: 063-22997, 063-23662
- 96, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம். தொ. பே. 025-22676
- தனசிரி கட்டிடம், இல. 195, பிரதான வீதி, இரத்தினபுரி. தொலைபேசி: 045-22389

இலவசம்!
ஒவ்வொரு திடமான பதிவுக்கும்
பஜாஜ் முச்சக்கர வண்டி
ஒரு சோடி பக்கத் திரைகளுடன் ஒரு லீட்டர் சர்வோ என்ஜின் எண்ணை கான் ஒன்றும்
இக்கொடுப்பனவு 2002 ஜனவரி 7 முதல் 31 வரை

மேல் விபரங்களுக்கு இக்கூப்பனை நிரப்பி கீள் குறிப்பிட்ட விலாசத்துக்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.
பெயர்............
விலாசம்............
சேவை நிலையம்............ தொலை பேசி............
பஜாஜ் முச்சக்கர வண்டி பற்றிய மேல் விபரங்களை அனுப்பி வையுங்கள்.

Tradlanka

# சித்த மருத்துவ விரிவுரைகள் புதன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரை வகுப்புக்கள் அனைத்தும் நாளைமறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன என்று பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

புதிய கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் அனைவரையும் விரிவுரை வகுப்புகளில் கலந்துகொள்வதற்கு ஆயத்தமாக கோயில் வீதியில் தற்காலிமாக இயங்கிவரும் சித்தமருத்துவத்துறைக்குச் சமுகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## நீங்காத நினைவில்
## இரண்டாம் ஆண்டு அஞ்சலி



மலர்வு 01 - 09 - 1974

உதிர்வு 14 - 01 - 2000

### முதலி பகீரதன்

*(பருத்தித்துறை நகராட்சிமன்ற ஊழியர்)*

**ஆறுதலைத் தரு மரம்போல் அவனியில் வீற்றிருந்தீர் - ஆர்வமோடு**
**பேறதனில் மேலான பேறாக உமைப்போற்ற பேணிவந்தோம்**
**பாரதனில் வாய்ப்பட்டுப் பதறுகின்ற குஞ்சதுபோல் பதுங்கிவாட**
**கூறரியீர்! விட்டெங்கு மறைந்திட்டீர்! மறைந்திட்டீர்! - கூறுவீரே.**

*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.* (97033)

*உம் பிரிவால் வாடும்:*
**குடும்பத்தினர்.**

## உள்ளூராட்சி தேர்தலுக்காக மலையகத்தில் புதிய கூட்டணி

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை முன்னிட்டு மலையகத்தில் மற்றுமொரு கூட்டு உருவாகிவருகிறது. இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைமையிலேயே புதிய கூட்டணி அமையும்.

இம்மாதம் 22ஆம் திகதி இக் கூட்டணியின் பெயர், போட்டியிடும் சின்னம் என்பன உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று முன்னணியின் தலைவர் டி.வி.சென்னன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டணியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

தொழிலாளர் தேசிய சங்கம், ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ், அகில இலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், புதிய செங்கொடிச் சங்கம் உட்பட மலையகத்தில் இயங்கும் தொண்டர் நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உத்தியோகப்பற்றற்ற முறையில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது இ.தொ.கா., ம.ம.மு. ஆகியவற்றுடன் தொடர்பு வைத்துக்கொள்வதை பல கட்சிகள் ஆதரிக்கவில்லை என்று சென்னன் சொன்னார். (ஐ-3)

## எரிகாயத்தால் பெண் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜன.14

எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று பிள்ளைகளின் தாயார் கடந்த ஆறு தினங்களின் பின்னர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நகுலேஸ்வரன் விஜயரூபி (வயது 23) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மரணவிசாரணைகள் மற்றும் பிரேத பரிசோதனைகளின் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-6-15)

## பாராட்டு விழா வைபவம்



### உயர்திரு.
### செ.கு.சண்முகநாதன் அவர்கள்

*(கூட்டுறவு, அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)*

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த காலத்தில், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவியேற்று கூட்டுறவு அமைப்புக்களைப் புனரமைத்து, புத்துயிர் கொடுத்து கூட்டுறவு அமைப்புக்கென ஒரு வங்கியை அமைத்து கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமையை மேம்படுத்தியதற்காகவும், கூட்டுறவு பணியாளரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியமைக்காகவும் அன்னாரின் சேவையைப் பாராட்டியும், பதவி உயர்வு பெற்று இடமாற்றம் பெற்றுச் செல்லும் அவரை வாழ்த்தியும் *இன்று (14.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில்* வலிகாமம் ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத்தணியின் தலைமைக் காரியாலயத்தில் பாராட்டு விழாவினை நடத்திச் சிறப்பிக்கின்றோம்.

**அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்**
***வலிகாமம் பனை தென்னை வள***
***அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்***
***கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும்.***


(C/20279)


# பழகிய அனுபவம் கொண்ட நீண்டநாள் தோழன் மீண்டும் உங்களுடன்!

யாழ். மண்ணின் விவசாய நிலைமைகளுக்கும் தேவைகளுக்கும் மிகவும் உகந்த 100 வருடகால நம்பிக்கையை வென்ற ஒரேயொரு இயந்திரம்


## பிறவுண் அன்ட் கம்பனி

BROWNS GROUP
BG
ESTD 1875






MASSEY FERGUSON

*இலங்கையில் அதிக அபிமானம் பெற்ற டிரக்டர்*


*இலங்கையில் அதிகம் விற்பனையாகும் இரண்டு சக்கர டிரக்டர்*






TAFE

*மஸி உதிரிப்பாகங்களோடு மாற்றக்கூடிய 90% மான உதிரிப்பாகங்களுடன் மஸி பேர்கூசன் லைசன்ஸின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டது.*

யாழ்.குடா நாட்டிலிருந்து விற்பனை முகவர்கள் தேவை

*உங்கள் நிறுவனத்தின் முழுமையான விவரங்களை எழுதி கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*


YANMAR *யப்பானின் முதல்தர இயந்திரம்*

ஏஜண்டுகள்: *பிறவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்*
*விவசாயப் பணிப்பகம்*
*இல. 75, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10*
*தொலைபேசி : 674172, 695238, 674332 பக்ஸ்: 692814*

(C/20284)

## தொண்டமனாறில் மருந்தகம் நிறுவப்படும்

தென்மராட்சி,ஜன.14

தொண்டமனாறுப் பகுதியில் புதிய மருந்தகம் அமைக்கப்படவுள்ளது.

தொண்டமனாறு, உடுப்பிட்டி, கெருடாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் இப்பகுதியில் மத்திய மருந்தகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய மருந்தகத்தை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஐ-117)

# யாழ். முஸ்லிம் பிரதேசத்துக்கும் அமைச்சர் சென்று பார்க்க வேண்டும்

## வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு கடிதம்

கொழும்பு, ஜன.14

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற கொள்ளும்போது யாழ்ப்பாணம் சோனகத் தெருவிலுள்ள வீடுகள், கல்லூரிகள், பள்ளிவாசல்கள் போன்றவற்றை நேரில் சென்று பார்வையிட வேண்டும் என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் வடக்கு முஸ்லிம் மக்களின உரிமைக்கான அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா யாழ்ப்பாணம வருவதற்கு முன்னர்-

இது தொடர்பாக அந்த அமைப்பின் செயலாளர் மௌலவி பீ.ஏ.எஸ். சுபியான் அமைச்சருக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமாக வாழ்ந்த முஸ்லிம்களின் சோனகத் தெருவில் உள்ள வீடு வாசல்கள், பள்ளிவாசல்கள், கல்லூரிகள் ஆகியன யுத்தத்தினால் முற்றாக அழிந்து போயிருக்கின்றன.

தைப்பொங்கல் தினத்தில் யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் செய்யும் தாங்கள் இப்பகுதிகளுக்கும் சென்று உண்மை நிலையைக் கண்டறிந்து வாருங்கள்.

மேலும் யாழ்ப்பாணத்தில் தற்பொழுது தங்கியிருக்கும் முஸ்லிம்களையும் சந்தித்து அவர்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும் கேட்டறிந்து ஆவன செய்யுங்கள்.

- என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ம-4)

## மல்லாகத்தில் திருட்டு


வலி.வடக்கு,ஜன.14

கடையின் கூரை 'சீற்'றைக் கழற்றி கடையினுள் இறங்கிய திருடர்கள் சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பால்மா, சீனி, சவர்க்காரம், சோடா உட்பட மற்றும் பல பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மல்லாகம் சோடாக் கம்பனிக்கு அருகில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் ஏற்கனவே பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ம-86)




## கண்ணீர் அஞ்சலி

யா/பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை முன்னாள் அதிபர்

### பொ.சுப்பிரமணியம்

அவர்கள் காலமாகிவிட்டார். அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


*அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

***பாடசாலைச் சமூகம்.***

யா/பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, *காரைநகர்.*
யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், *காரைநகர்.*

(97061)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 - 07 - 1951 | 15 - 12 - 2001 |

### அமரர் சின்னத்தம்பி கந்தையா

*(மீசாலை வடக்கு - கொடிகாமம்)*

எம் குடும்பத் தலைவரது பிரிவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நாம் நன்றி கூறுவதுடன் நாளை *(15. 01. 2002)* *செவ்வாய்க்கிழமை* நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.


குறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

*பிரிவால் துயருறும்*
க.சிவமலர் *(மனைவி)*
க.சியந்தன் *(மகன்)*
க.துர்க்கா *(மகள்)*
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

தற்போதைய முகவரி:
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி*


(97030)


# உங்கள் விவசாயத் தேவைகளுக்கு நம்பிக்கையானவர்களை நாடுங்கள்!




### மின்சாரப் பம்பிகள்

*சிங்கிள் பேஸ் வீட்டுப் பாவனை மற்றும் விவசாயப் பம்பிகள் 1"- 3" குழாய் அளவுகளில் கிடைக்கும். இத்தாலி மோட்டார் மற்றும் மணற்பாங்கான இடங்களில் பாவனைக்குகந்த செரமிக் சீல். நீடித்துழைப்பதும், நம்பிக்கையானதும். உதிரிப்பாகங்கள் இலகுவில் கிடைக்கும்.*




### என்ஜின் பம்பிகள்

*2"x2" குழாய் அளவுகளில் NSP மற்றும் SP மொடல்கள். காற்றினால் குளிரூட்டப்படும். ஜப்பானிய 4.2 hp குபோட்டா KS 200 பெற்றோல்/கெரசின் என்ஜின் உதிரிப்பாகங்கள் எளிதில் கிடைக்கும்.*

## பிறவுண் அன்ட் கம்பனி

BROWNS GROUP BG ESTD 1875

யாழ்.குடா நாட்டிலிருந்து விற்பனை முகவர்கள் தேவை

*உங்கள் நிறுவனத்தின் முழுமையான விவரங்களை எழுதிக் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*




hudson sprayer

### ஹட்சன் பிளாண்டர் மிஸ்ட் விசிறு கருவி

*அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது. 1.25லீ கொள்ளளவு விசிறு கருவி சிறு தோட்டச் செய்கைக்கு உகந்தது. துருப்பிடிக்காத தயாரிப்பு நீடித்து உழைப்பு.*




Brownspray

### ஸ்டெயின்லஸ் ஸ்டீல் விசிறு கருவிகள் *

*16லீ பகுதி தன்னியக்க, முதுகில் பொருத்தும் விசிறு கருவி. வளைந்த அடப்டர். இலவச நிரந்தர உதிரிப்பாகங்கள். துணையுறுப்புகள் பொதி.*

ஏகமுகவர்கள்: *பிறவுண் அன்ட் கம்பனி லிமிட்டெட்*
*விவசாயப் பணிப்பகம்*
*இல. 75, தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை, கொழும்பு 10*
*தொலைபேசி : 674172, 695238, 674332 பக்ஸ்: 692814*

(C/20285)

(மனிதன் மிருகமாக மாறிவிட்டான்!)

# நல்ல போதனைகள் ஏதுமின்றி நாட்டில் இன்று ஓரே அவலங்கள்

## பீடாரோஹண விழாவில் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14

நல்ல போதனைகள் - வழிகாட்டல்களே மனிதர்களை வழிப்படுத்தக் கூடியன. இவ்வாறான போதனைகள் இன்மையே எமது நாடு இன்று எதிர்நோக்கியிருக்கும் அவலங்களுக்கும், மனிதர்கள் மிருகங்களாக மாறியிருப்பதற்கும் காரணங்களாகும்.

- இவ்வாறு கவலை தெரிவித்தார் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூத்த கலைஞர் திருமதி வசந்தா வைத்தியநாதன்.

சர்வதேச இந்து மதகுரு பீடாதிபதி பிரம்மஸ்ரீ ஜம்புகேஸ்வர மஹேஸ்வர சிவாச்சாரியாரின் பீடாரோஹண விழா நேற்றுமுன்தினம் யாழ். நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமதி வசந்தா வைத்தியநாதன் தனது உரையில் மேலும் தெரிவிதததாவது:-

ஒவ்வோர் அந்தணக் குழந்தையும் வேதம் பயிலவேண்டும். வேதம் பயின்று வந்தால் நாடு நன்மைபெறும். வேதத்தைப் பயில்கின்ற குழந்தைகள் தேவர்களாக மாறுவார்கள். குரு பீடாதிபதி இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எமது சமுதாயத்தைப் பொறுத்தவரையில் பெற்றோர்கள் தமது கடமைகளை மறந்துவிட்டனர். குழந்தைகளுக்கு நல்ல போதனைகள் செய்திருந்தால் நாட்டில் இன்று இவ்வளவு அவலங்களும் ஏற்பட்டிருக்கா. மனிதன் மிருகமாக மாறிவிட்டான். அன்றைய காலத்தில் இருந்த குருகுலக்கல்வி முறை இன்று இல்லை. அதன்மூலம் ஒழுக்கமான சமூகத்தை உருவாக்க முடியும். மீண்டும் இங்கு குருகுலக்கல்விமுறை ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை குருபீடாதிபதி மேற்கொள்ளவேண்டும். ஓர் இலட்சியமாக, குறிக்கோளாக, சபதமாக இதை நிறைவேற்றுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாகப் பதவியேற்றுள்ள இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இந்து சமயத்துக்கு ஏதாவது நல்ல பணிகள் செய்யவேண்டுமென நினைக்கிறார். திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனரமைப்பு அவரின் ஆரம்பப் பணியின் வெற்றி - என்றார்.

### நல்லை ஆதீன முதல்வர் உரை

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தமது உரையில் -

இந்து மதகுருமார்களுக்கு ஒரு குருபீடம் வேண்டும் என்று எல்லோரும் விரும்பிய வேளையில் அதன் குருபீடாதியாக தெரிவுசெய்யப்பட்டவரின் பீடாரோஹண விழா இன்று வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

இந்த குருபீடத்தின் மூலம் சமய நெறிகளைப் போதிக்கவேண்டிய நிலைப்பாடு அனைவருக்கும் உண்டு. ஒவ்வொரு சிவாச்சாரியார்களும் ஒவ்வொரு குருமார்களும் தங்கள் பணிகளை நல்லபடி முன்னெடுக்கவேண்டும். - என்று கேட்டுக்கொண்டார்.

யாழ்.மாவட்ட மேலதிக உதவிப் பதிவாளர் நாயகமும், 'நியந்த்ரீ' அமைப்பின் துணைத்தலைவருமான ந.சதாசிவ ஐயர் தமது உரையில் -

புதிய குருபீடாதிபதி தனது செயற்பாடுகளை நல்லபடி முன்னெடுப்பதற்கு எமது 'நியந்த்ரீ' அமைப்பு தனது பங்களிப்பை வழங்கும் என்றார்.

தர்மசாஸ்தா குருபீடத்தின் சார்பில் உரையாற்றிய தா.ஹரிகர சுப்பிரமணியக் குருக்கள் தெரிவித்ததாவது:-

சமயக்கிரியைகளைச் செய்வதில் நன்கு தேர்ச்சிபெற்றவர்தான் பீடாதிபதி மஹேஸ்வர சிவாச்சாரியார். எந்தக் கிரியைகள் ஆயினும் சரி அதை நல்லபடி செய்ய வேண்டும் என்று நினைப்பவர்; அப்படியே செய்து வருபவர். இவ்வாறான ஒருவர் குருபீடாதிபதியாக இருந்து, ஆலோசனை வழங்கி எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் சார்பில் டாக்டர் வி.செல்லத்துரை உட்படப் பல குருமார்களும் மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

(க-10-180)




குருநகர் சமூக சேவை அமைப்பு குருநகர் கலை அரங்கில் நடத்திய பரிசளிப்பு விழா நிகழ்வில் அந்த அமைப்பின் தலைவி திருமதி யூ. யூலியஸ் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட எழுத்தாளர் அ.யேசுராசா, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட குருநகர் பங்குத்தந்தை அருட்திரு அ.பி.ஜெயசேகரம் அடிகள் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர். (ஜ-51)

## எது வழிபாடு?



மதம் வாழ்வது அன்பில்,.. இதயத்தின் தூய்மையான, உண்மையான அன்பில்தானே தவிர சடங்குகளில் அல்ல. உடலாலும் மனத்தாலும் தூய்மையாக இல்லாமல் ஒருவன் கோயிலுக்கு வருவதும் சிவபெருமானை வழிபடுவதும் பயனற்றது. உடம்பாலும் மனத்தாலும் தூய்மையாக இருப்பவர்களின் பிரார்த்தனைகளை சிவபெருமான் நிறைவேற்றுகிறார். ஆனால் தாங்களே தூய்மையற்றவர்களாக இருந்து கொண்டு பிறருக்கு மதபோதனை செய்பவர்கள் இறுதியில் தோல்வியையே அடைகிறார்கள். புறவழிபாடு என்பது அக வழிபாட்டின் அடையாளம் மட்டுமே அக வழிபாடும் மனத்தூய்மையும்தான் உண்மையான விஷயங்கள். இவையின்றிச் செய்யப்படுகின்ற புற வழிபாடு பயனற்றது.

தாங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம், பிறகு ஒரு தீர்த்தத் தலத்திற்குச் சென்றால் அந்தப் பாவம் எல்லாம் மன்னிக்கப்பட்டு விடும் என்று நினைக்கும் அளவிற்குக் கீழான நிலைக்கு இந்தக் கலியுகத்தில் மக்கள் வந்துவிட்டார்கள். தூய்மையற்ற உள்ளத்துடன் கோயிலுக்குச் செல்கின்ற ஒருவன் ஏற்கனவே இருக்கின்ற தன் பாவங்களுடன் மேலும் ஒன்றைக் கூட்டுகிறான், புறப்பட்டபோது இருந்ததைவிட மோசமானவனாக வீடுதிரும்புகிறான். சாதாரண இடங்களில் செய்யப்படும் பாவங்களை எளிதாக நீக்கிக்கொள்ளமுடியும். ஆனால் தீர்த்தத் தலங்களில் செய்யப்படும் பாவத்தை நீக்கவே முடியாது.

- சுவாமி விவேகானந்தர்.

*(குடாநாட்டில் கடந்த சனிக்கிழமை முதல் ஒருவார காலத்துக்கு ஆன்மீக எழுச்சிவாரம் அனுஷ்டிக்கப்படுகிறது)*

## பல குடும்பங்கள் தென்மராட்சி திரும்புகின்றன

சண்டிலிப்பாய்,ஜன.14

போர் அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்கு பிரிவில் வசித்து வந்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் இவ்வாரம் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றுள்ளன.

கொடிகாமம், மட்டுவில், மீசாலை, சரசாலை, கைதடி ஆகிய இடங்களுக்கு இக் குடும்பங்கள் திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இப் பகுதிகளில் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாவதை அடுத்து பிள்ளைகளின் நலன்கருதி தாம் அங்கு செல்வதாக இடம்பெயர்ந்தவர்களில் சிலர் கருத்து தெரிவித்தனர். (ஐ-135)

## தொழில்நுட்ப நிறுவன கற்கை நெறிக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கற்கை நெறிகளைத் தொடர விரும்பும் மாணவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகலுக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார்.

ஆங்கில மொழிமூல கற்கை நெறியான உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பகல் நேர கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் -

- ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய இருபாடங்களிலும் ஒரே தடவையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் உயர் தரப்பரீட்சை எந்தத் துறையிலேனும் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-6)

## ஆஸ்பத்திரி சிற்றூழியருக்கு சீருடை அலவன்ஸ்!

யாழ்ப்பாணம்,ஜன.14

அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் சிற்றூழியர்களுக்கு சீருடை அலவன்ஸாக ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சால் இந்த வருடம் முதல் மேற்படி அலவன்ஸ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் சிற்றூழியர்களின் சீருடை தையல் கூலியாக 400 ரூபாவும், சப்பாத்திற்காக 400 ரூபாவும் சீருடைகளைச் சலவை செய்வதற்காக 200 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கைகள் யாழ்.சுகாதார சேவைகள் பணிமனைக்கும், வைத்தியசாலைகளுக்கும் சுகாதார அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-6)

## கைதடிப் பகுதியில் பயிர்ச்செய்கை

சாவகச்சேரி,ஜன.14

கைதடிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். புகையிலை, மிளகாய், வாழை போன்ற பயிர்ச் செய்கையில் அவர்கள் ஆர்வம்காட்டுகின்றனர். (க-31)

# தேவாலயங்களில் இன்று பொங்கல் திருப்பலி பூசை

குருநகர்,ஜன.14

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினமான இன்று காலை கத்தோலிக்க தேவாலயங்களில் விசேட திருப்பலிகள் இடம்பெறவுள்ளன.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று காலை 5.30 மணிக்கு குருநகர் பங்குத் தந்தை அருட்கலாநிதி அ.பி.ஜெயசேகரம் அடிகள் பொங்கல் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

தொடர்ந்து குருநகர் புனித யாகப்பர் ஆலய இளைஞர் ஒன்றியத்தினால் பொங்கல் நிகழ்ச்சிகள் நடத்தப்படஉள்ளன. (ஜ-51)

## உடுவில் கமநல பிரதேசத்தில்

# வறுமை நிலையில் வசிக்கும் விவசாயிகள் விவரம் சேகரிப்பு

சண்டிலிப்பாய்,ஜன.14

உடுவில் கமநல கேந்திர நிலையப் பிரிவில் வசிக்கும் - 750 ரூபாவுக்கு குறைந்த மாத வருமானமுடைய - வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ள விவசாயக் குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தமது பிரிவிலுள்ள விவசாயிகள் சம்மேளனங்களின் தலைவர்களுக்கு கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் மேற்படி விவரங்களைத் தமக்கு அறிவிக்கும்படி கேட்டுள்ளார்.

வறுமை நிலையிலுள்ள விவசாயியின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விவரங்களைச் சேகரித்து அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ-135)

# சஞ்சீவி வாசகர் கருத்து

## நிவிர்த்தி செய்யுமா சஞ்சீவி?

சிறுவர்களுக்கான ஆங்கில சஞ்சிகைகள் இன்மை எமது மண்ணில் பெரும் குறைபாடாகவே உள்ளது. இதனைச் "சஞ்சீவி" நிவிர்த்தி செய்யுமா? இதற்கென ஒரு பக்கத்தை ஒதுக்கி, கேலிச்சித்திரங்கள் அடங்கிய கவர்ச்சியான படங்களுடன் மாணவர்களின் கற்றல் ஆற்றலைத் தூண்டலாம்.

உயிரியல் விஞ்ஞானப் பகுதிக்கு முக்கியம் கொடுத்தது போன்று உள்நாட்டு, வெளிநாட்டு ஆங்கில, தமிழ் சஞ்சிகைகளில் வந்த நல்ல விடயங்களையும் தரலாம்.

"சஞ்சீவி"யில் தொடர்ந்தும் மருத்துவத்திற்கு இடம் ஒதுக்குவதன் மூலம் சமுதாயத்தில் பெரும் நன்மைகளை மக்கள் பெறமுடியும்.

அத்துடன் வித்துவான் பதில் பகுதியில் கொடுக்கப்படும் பதில்களை எல்லோரும் ரசிக்கத்தக்க வகையில் - 'காமரசம்' தழுவாத வகையில் - அமைத்துத் தருவது சிறப்பாக இருக்கும்.

காப்பியம், இதிகாசங்கள், பக்திப்பாடல்களில் உள்ள சிறுதவறுகளைக் கிளறிவிட்டு சமுதாயத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்காமலும் "சஞ்சீவி" வெளிவந்து சேவை புரியும் என எதிர்பார்க்கிறேன்.

*நல்லூர்.* *ச.தி.சண்முகராஜா.*

## சஞ்சீவியே உன்பணி தொடர்க!

சலனத்தைப் போக்கவல்ல சஞ்சீவியே! மீண்டும் உன் வருகையைக் காணவென என் கண்கள் ஏங்குகின்றன.

நீ சுமந்து வந்த அனைத்து அம்சங்களும் படு 'சூப்பர்'. அந்தவகையில் வித்துவான் பதில்கள், சொற்சிலம்பம், வார்த்தை விளையாட்டு, சிறுகதை, போன்றன குறிப்பிடத்தக்கன.

இவற்றுடன் சினிமாப்பகுதி, தொடர்கதை முதலான பகுதிகளையும் சேர்த்துக்கொண்டால் சிறப்பாக இருக்கும்.

அன்றுபோல் மீண்டும் நீ வெளிவந்து பொலிவுடன் விளங்க புலந்திருக்கும் புத்தாண்டில் எனது வாழ்த்துக்கள்.

*கொடிகாமம்.* *எஸ்.சசிகலா.*

## கல்விக் கட்டுரைகளுக்கு முக்கிய இடம் அளியுங்கள்!

ஜி.சீ.ஈ. சாதாரண தரம், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகளுக்கு ஏற்ற வகையிலான பாடவிதானப் பகுதிகளை உள்ளடக்கிய கட்டுரைகளை "சஞ்சீவி" தாங்கிவருமாயின் மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் கொழும்புடன் தொடர்புடைய பிரபல ஆசிரியர்கள் கல்லூரிகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பிக்கிறார்கள். இவர்களின் கட்டுரைகள் "சஞ்சீவி"யில் வெளிவருமாயின் அது எம்போன்ற மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென நான் நம்புகிறேன்.

*சங்கானை.* *மாணவிகள்.*

## நியாயத்துக்காகக் குரல்கொடுக்க "சஞ்சீவி" தொடர்ந்தும் வெளிவர வேண்டும்

"சஞ்சீவி" என்றால் உயிரூட்டவல்லது என்பது பொருளாகும். எனவே "சஞ்சீவி" மீண்டும் வருவது வியப்பிற்குரியதன்று. இது நல்ல சந்ததியினரை உருவாக்க உறுதுணையாக நிற்குமென நான் எதிர்பார்க்கின்றேன்.

மக்கள் மத்தியில் தமிழ் பண்பாடு, கலை, கலாசாரத்தினை வலியுறுத்துவதுடன், மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வும், தேசிய உணர்வும் ஏற்பட வழிகாட்டுவதும் "சஞ்சீவி"யின் பெரும் பணியாகும்.

கலகம் பிறந்தாலே நியாயம் கிடைக்கும் என்பதற்கிணங்க சமுதாயத்தின் சில சிக்கலான விடயங்களையும் "சஞ்சீவி" தாங்கி வருவது வரவேற்கத்தக்கது. எதையும் மறைவின்றி முன்னர்போல் தொடர்ந்தும் எழுதுதல் வேண்டும்.

இன்று எமது மண்ணில் நடைபெறும் போராட்டம் உலகில் பயங்கரவாதமாகப் பிரசாரப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மாற்றி அமைக்க தமிழர்களுக்கென - தமிழர்களின் போராட்டத்தை விளக்கும் வகையில் - ஆங்கிலப் பத்திரிகை ஒன்று உருவாக்கப்படவேண்டிய தேவையுள்ளது.

சமுதாயத்துக்கு உகந்த பல விடயங்களை வெளிப்படுத்துவதையே "சஞ்சீவி" நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். காமரசம் தழுவிய விடயங்களைத் தவிர்த்துக்கொள்வதும் "சஞ்சீவி"யின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிபுரியும்.

"சஞ்சீவி" தொடர்ந்தும் எம் மண்ணில் நியாயத்திற்காக குரல் கொடுத்து வளர்ச்சி அடைய எமது வாழ்த்துக்கள்.

*வண்ணார்பண்ணை.* *மகாலிங்கம்.*

# தொலைபேசி ஒற்றாடலை உடன் நிறுத்தும்படி பணிப்பு

## பாதுகாப்பு அமைச்சர் விடுத்தார்

கொழும்பு,ஜன.14

உள்நாட்டு உளவுப் பிரிவு இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்படும் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்கும் உளவு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தும்படி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உத்தரவிட்டிருக்கின்றார்.

மறுஅறிவித்தல்வரை இது விடயத்தில் சகல நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும் என்று மேற்படி இயக்குநரக உயரதிகாரிகளுக்கு அமைச்சர் மாரப்பன நேரடியாக உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வழமையாக மேற்கொள்ளப்படும் தொலைபேசி ஒற்றாடல் நடவடிக்கையால் தற்போதைய போர்ச் செயற்பாடுகளில் பெரிய நன்மை ஏதும் கிடைக்கவில்லை என்பது முன்னால சட்டமா அதிபரான அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு நன்கு தெரியும் என்று குறிப்பிட்டார் இராணுவ ஆய்வாளர் ஒருவர்.

அரசியல் பிரமுகர்கள் என்ன செய்கிறார்கள், யார் - யாருடன் கூட்டுச் சேர்கின்றார்கள், பிரமுகர்களின் காதலிகள் யார், யார்? என்பவை குறிதது்க் கண்டுபிடிப்பதே பெரும்பாலும் தொலைபேசி ஒற்றாடல்களின் நோக்கமாக இருந்து வந்துள்ளது என்றும் அவர் கூறுகின்றார்.

1994இல் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த போதும் இதேபோன்ற உத்தரவு பிறபபிக்கப்பட்டது. தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக்கேட்கும் துணை இணைப்புக்களை அடியோடு துண்டிக்கும்படி ஸ்ரீலங்கா ரெலிக்கொம் அதிகாரிகளுக்கு அப்போதைய தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர உத்தரவிட்டிருந்தார்.

பின்னர் முடிவில் மாற்றம் செய்யப்பட்டு ஒற்றுக்கேட்பது தொடர்ந்தது.

ஆனால் - பாதுகாப்பு அமைச்சரின் முன்அனுமதியின்றி - தொலைபேசி ஒற்றாடல் செய்யமுடியாது என்ற விதிமுறை கடுமையாகக் கடைப்பிடிக்கப்படும் என்று தற்போதைய அரசு தெரிவித்துள்ளது.

முன்னைய ஆட்சிக் காலத்தில் அரசியல்வாதிகள், பத்திகையாளர்கள், வெளிநாட்டுச் செய்தியாளர்கள் போன்றோரின் தொலைபேசிகள் நிரந்தரமாக ஒற்றுக்கேட்கப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவை அடுத்து யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளரின் தொலைபேசிகள் ஒற்றுக்கேட்கப்படுவதும் நிறுத்தப்படுமா என்பது தெரியவில்லை. (உ)

# சர்வதேச நாணய நிதியக்குழு அடுத்த மாதம் இங்கு வருகிறது

கொழும்பு,ஜன.14

இலங்கைக்கு எதிர்காலத்தில் வழங்கவேண்டிய உதவிகள் தொடர்பாக ஆராய, சர்வதேச நாணய நிதியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த மாதமளவில் இங்கு வரவிருப்பதாக நிதியமைச்சர் கே.என். சொக்ஸி தெரிவித்தார்.

ஐ.தே.முன்னணி அரசு எதிர்கால அபிவிருத்தி குறித்த திட்டங்களைத் தயாராக வைத்திருப்பதால், கடந்த ஆண்டுகளைவிட இந்தத் தடவை அதிகளவான உதவிகளை எதிர்பார்க்கலாம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 700 மில்லியன் டொலர்கள் உதவித் தொகையாக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த அரசால் 400 மில்லியன் டொலர்களை மட்டுமே பயன்படுத்த முடிந்ததாகவும் -

அதனிடம் முறையான செயற்றிட்டங்கள் இல்லாததே இதற்குக் காரணம் என்றும் -

அவர் கூறினார். (ஒ)

## மகரஜோதி விழா

சண்டிலிப்பாய்,ஜன.14

வடலியடைப்பு பாரத்தனை ஸ்ரீ பூரணா புஸ்பகலா சமேத ஹரிஹர புத்திரர் (ஐயனார்) ஆலயத்தில் நவரோத்திர சத 109 கலச சங்காபிஷேகமும், மகரஜோதி விழாவும் பொங்கல் தினமான இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு வடலியடைப்பு புதறானை சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து 108 பாற்செம்புகள் அடியார்களால் எடுத்துவரப்பட்டு ஆலயத்தில் 109 கலச சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து சுமங்கலி பெண்கள் தீப பூசை, 18 படிபாடல் படிக்கப்பட்டு வசந்தமண்டபப் பூஜை இடம்பெறும். (ஐ-135)

## பங்கீட்டு அட்டைக்கு மண்எண்ணெய்

யாழ்ப்பாணம்,ஜன.14

புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.சங்கம் நாளை முதல் பங்கீட்டு அட்டைக்கு மண்எண்ணெய் வழங்கவிருக்கின்றது.

மா,சீனி, அரிசி ஆகியவற்றை எதுவித கட்டுப்பாடும் இன்றி விற்பனை செய்வதாகவும் -

அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடு இன்றி மக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி க.இராஜரெட்ணம் தெரிவித்துள்ளார். (ம-3)


# பொங்கல் வாழ்த்துக்கள்

தொடர்ச்சியாகக் கடந்த 25 வருடங்களாக உங்களுடன் பொங்கல் விழாவைக் கொண்டாடும் ஒரே ஒரு நிதி நிறுவனம் வரையறுக்கப்பட்ட த பினான்ஸ் கம்பனி

THE FINANCE CO LTD,
180,POINTPEDRO ROAD,
JAFFNA.

உங்களுக்கு எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள். உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பான உயர் வட்டிக்கு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

(C/20296)


கல்லூரி வீதி, மத்திய மருந்தகம், பருத்தித்துறை.

# அடிக்கல் நாட்டு விழா

தலைவர்: வைத்தியகலாநிதி உமா சிவபாதசுந்தரம் அவர்கள் (யாழ். மாகாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்)

காலம்: 14-01-2002 முற்பகல் 11.30 மணி

பிரதம விருந்தினர்: கௌரவ டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா அவர்கள் (புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர்)

சிறப்பு விருந்தினர்: கௌரவ தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் (இந்து கலாசார அமைச்சர்)

- ஏற்பாட்டாளர் குழு.

(C/20298)

# அச்சுவேலியில் 'மைனர்'கள் அட்டகாசம்!

யாழ்ப்பாணம்,ஜன.14

அச்சுவேலி சந்திக்கு அருகில் தினமும் மாலைவேளையில் கூடும் குறிப்பிட்ட சில இளைஞர்கள், தனியார் கல்வி நிலையங்களில் இருந்து திரும்பும் மாணவிகளைக் கேலி செய்வதுடன் தகாத வார்த்தைப்பிரயோகங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதை அறிந்த பெற்றோர்கள் சிலர் அந்த இளைஞர்களை எச்சரித்திருந்தனர். எனினும் இளைஞர்களின் அட்டகாசம் குறைந்தபாடாக இல்லை. நாளுக்குநாள் அந்த 'மைனர்'களின் அநாகரிகச்செயல்கள் அதிகரித்தே வருகின்றன. இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பெற்றோர்கள் கேட்கின்றனர். (க-4)

## நகரசபை அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம்

தென்மராட்சி,ஜன.14

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்திற்கென 40 லட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

தற்போது பருத்தித்துறை தும்பளை வீதியில் நகரசபை அலுவலகம் இயங்கும் கட்டடத்தைக் கொள்வனவு செய்வதற்கு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி கோரியுள்ளதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த 20 வருடங்களாக நகரசபை அலுவலகம் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## வீதியில் சென்றவர் வழிமறித்து தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஜன.14

வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவர் இனந்தெரியாத குழு ஒன்றினால் வழிமறிக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் அச்சுவேலிச் சந்திக்குச் சமீபமாக, வல்லை வீதியில் அச்சுவேலியைச் சேர்ந்த எஸ்.செல்வராஜா (வயது 36) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானார்.

இவர் கூக்குரலிட்டதை அடுத்து தாக்கியவர்கள் அவ்விடத்தைவிட்டு தப்பி ஓடிவிட்டனர் என்று கூறப்பட்டது.

வீதிகளில் செல்வோரைத் தாக்கி மடக்கி பணம், நகைகள் என்பனவற்றைப் பறித்துச்செல்லும் சம்பவங்கள் இப்பகுதியில் கடந்த சில மாதங்களாக அதிகரித்திருக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-4)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.14

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விளையாட்டுக்கழகங்களுக்கான பதிவு இலக்கம் வழங்கல், இவ்வாண்டு விளையாட்டுப் போட்டி நடத்துவது ஆதியன தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்படவிருக்கிறது. (ம-3)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.14

சுன்னாகம் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலைய முன்றிலில் பொங்கல் விழா நடைபெறும். (ஐ-6)

★ ★ ★

வலி வடக்கு,ஜன.14

சுகவாழ்வு நிலையத்தினால் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வண.பிதா சூ.டேமியன் அடிகள் தலைமையில் பொங்கல் விழா நடைபெறவுள்ளது. (ம-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.14

தெல்லிப்பழை சித்தியம்பதி அருள்மிகு அண்ணமார் ஆலயத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பொங்கல் விழா இடம்பெறும்.

ஆலயத் தலைவர் கு.முருகையா தலைமையில் விசேட பஜனை, சமயச் சொற்பொழிவு என்பன இடம்பெற்று சுவாமி வெளிவீதியுலா வருவார். (ம-7)


# உளமகிழ்ந்து உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலிலும் 2ஆவது தடவையும் வெற்றிபெற்று, இந்து கலாசார அமைச்சராகப் பதவியேற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

கௌரவ தி. மகேஸ்வரன் அவர்கள்

மேன்மேலும் மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டும் என்று உளமகிழ்ந்து உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No. 2567.

உரிமையாளர்
து.குருநாதசிவம் அவர்களும்
ஊழியர்களும்.

(C/20295)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'வீல் மூவர்ஸ் ட்டோ சப்பிளையர்ஸ்'

642, பருத்தித்துறை வீ, நல்லூர். T.P. 2179, 2443, 3234

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 2047

(97075)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| | |
|---|---|
| பருத்தித்துறை முன்னாள் நகர பிதா அமரர் | பருத்தித்துறை நகர சபை முன்னாள் ஊழியர் |
| திரு.வடிவேலு விஜயரத்தினம் | திரு.முதலி பகீரதன் |
| தோற்றம் 19.02.1948 | தோற்றம் 01.09.1974 |
| மறைவு 14.01.2000 | ம்றைவு 14.01.2000 |

இவர்கள் மறைந்து ஈராண்டுகள் உருண்டோடியும் இவர்கள் ஆற்றிய சேவைகள் எம் நெஞ்சைவிட்டு அகலவில்லை. இவர்களின் நினைவு நாளில் இவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தலைவர், உப-தலைவர்,
உறுப்பினர்கள், செயலாளர்,
அலுவலர்கள்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

*நகராட்சி மன்ற அலுவலகம்,*
*பருத்தித்துறை, 2002.01.14.*

(C/20297)

# கண்ணீர் அஞ்சலி

கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய உத்தியோகத்தர் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சபாரத்தினம் மகேஸ்வரி

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது வைத்தியசாலையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வைத்திய பொறுப்பதிகாரி,
*ஆயுர்வேத வைத்தியசாலை,* வைத்திய உத்தியோகத்தர்கள்,
*கைதடி.* உத்தியோகத்தர்கள்.

(97072)

# மரண அறிவித்தல்

## கணபதி பாறுவதி

கோணாவளை, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் மடத்தடி, வயாவிளானை வசிப்பிடமாகவும் தற்போது ஆறுகால்மடத்தடியில் வசித்து வந்தவருமாகிய கணபதி பாறுவதி 10.01.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தர் - சோதிப்பிள்ளையின் அன்பு மகளும், ஆழ்வார் கணபதியின் பாசமிகு மனைவியும், சோதிப்பிள்ளை, சிதம்பரம், மாணிக்கம், குழந்தைவேல், கதிரவேல், காலஞ்சென்ற முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜகோபால், மீனாட்சி, கதிரமலை (லண்டன்), மகாராஜா (வவுனியா), காலஞ்சென்ற வெள்ளிமலை மற்றும் லீலாவதி (பிரான்ஸ்), கைலைவாசன் (சுவிஸ்), பாக்கியவதி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மீனாட்சி அம்மா
(மகள்)

*மயிலு வீதி,*
*ஆறுகால்மடம்.*

(97073)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்

**வீடியோ எக்கனமி மியூசிக் கோணர்** ஸ்தாபனத்தினர்

- வீடியோ, ஓடியோ CD பதிவுகளுக்கும்
- ஓடியோ CDயிலிருந்து நீங்கள் விரும்பும் பாடல்களை துல்லியமான முறையில் ஒலிப்பதிவு செய்துகொள்வதற்கும்
- வீடியோ CD, வீடியோ கொப்பிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கும்.

**வீடியோ எக்கனமி மியூசிக் கோணர்**

எமது வாடிக்கையாளர்களின் நலன்கருதி
வாடகைக் கட்டணங்கள் புதிய பட வீடியோ CD 50/=,
பழைய பட வீடியோ CD 40/=, ஆங்கில பட வீடியோ CD 30/=,
வீடியோ கொப்பி 20/= ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது
என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

"இளைய தலைமுறையின் உன்னத இசைப்பதிவகம்"

**வீடியோ எக்கனமி மியூசிக் கோணர்**

297, பலாலிவீதி - பரமேஸ்வராச்சந்தி,
கிளை - மாக்கற் சதுக்கம் - சங்கானை.
(97080)



எமது வாடிக்கையாளர்கள்,
ஆதரவாளர்கள், நண்பர்களுக்கு
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.



ஆண், பெண், சிறுவர், சிறுமியருக்கான சேட், T.சேட், ரவுசர் துணி வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண் வகைகள் மற்றும் நவீன டிசைன்களில் பல ரக சாறி வகைகள் முதலியவற்றை தரமாகவும் நியாயவிலையிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**மிலேனியம் பெஷன்**

304, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 3124

உரிமையாளரும்,
ஊழியர்களும்.
(97076)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னையா பொன்னம்மா

திருமதி சின்னையா பொன்னம்மா நேற்று (13.01.2002) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க்ந்தவனம் - சின்னையா அவர்களின் அன்பு மனைவியும், சிவயோகம் (ஓய்வுபெற்ற ஆ,சிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), Dr.சுந்தரலிங்கம் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர், மட்டுவில் ம.வி.), பவளக்கொடி அச்சலிங்கம் (வேதாரணியம் விநாயகர் வித்தி., கரணவாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சந்திரலிங்கராசா, தேவி, கமலாதேவி, நாகராசா (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், மீசாலை வீரசிங்கம் ம.வி.), சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொற்பலவு மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.
(C/20301)

தகவல்:
சி.சண்முகலிங்கம்
(மகன்)

## திருமதி சின்னத்துரை நாகம்மா

நெடுந்தீவு கிழக்கு, 13 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை நாகம்மா நேற்று (13.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னத்துரையின் அன்பு மனைவியும் மோகனதாஸ் (கனடா), அமிர்தாம்பிகை, காலஞ்சென்ற கோசலாதேவி, விஜயாம்பிகை (எழுதுவினைஞர், பல நோக்குக் கூ.சங்கம், நெடுந்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோன்மணி (கனடா), காலஞ்சென்ற தர்மபுத்திரன், கணேசலிங்கம் (தபாலதிபர், அனலைதீவு; தலைவர், பல நோக்குக் கூ.சங்கம், நெடுந்தீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காயத்திரி (கனடா), பிரதீபன், காண்டீபன், டயானா, துளசி, அகிலன், தயாளன், மாறன், சாம்பவி, அனுஷன் ஆ,கியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (14.01.2002) திங்கட்கிழமை 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

'சாந்தி நிலையம்'
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
(97079)

தகவல்:-
சு.கணேசலிங்கம்
(மருமகன்)

# அமைச்சர் மிலிந்த தளபதியுடன் மட்டுநகர் விஜயம்

பொருளாதாரச் சீர்திருத்த விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவும், இராணுவத் தளபதி லயனல் பலகல்லவும் நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம செய்தனர். உயரதிகாரிகளுடன் அவர்கள் பேச்சு நடத்தினர்.

மட்டக்களப்பு பிரிகேட் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாவட்ட அரச அதிபர் சண்முகம், சமாதானக் குழுத் தலைவர் மார்டின், சுவாமி ஆத்மகானந்தஜி, வர்த்தகர் சங்கத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப் பட்டது. தொடரும் சோதனைக் கெடுபிடிகளை அகற்றி, இயல்பு நிலையை ஏற்படுத்தவும், கட்டுப்பாடு இல்லாத பகுதி மக்களுக்கு நிவாரணங்களை காலதாமதமின்றி வழங்கவும், இரவுநேர பஸ் சேவையை வெளியிடங்களுக்கு மீண்டும் ஆரம்பிக்கவும் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அமைச்சர் மிலிந்த மொறகொட இது பற்றிப் பதிலளிக்கையில் தான் இது விடயமாகப் பிரதமருடன் பேச்சு மேற கொள்வதாக உறுதியளித்தார். (ம)

## மகரஜோதி பெருவிழா

கோண்டாவில் ஸ்ரீசபரீஸ ஐயபப சேவா சங்கத்தினரின் மகரஜோதிப் பெருவிழா தைப்பொங்கல் தினமான இன்று திங்கட்கிழமை வெகுசிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

நண்பகல் 12 மணிக்கு சுன்னாகம் ஐயனார் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள், 18 படிப் பூஜை மற்றும் சபரீஸ சேவா சங்கத்தினரின் பஜனை என்பன இடம்பெறும். பின்னர் அங்கிருந்து புறப்படும் சபரீஸ ஐயப்ப சேவா சங்கத்தினர் பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரீகதிரேசன் ஆலயத்தில் பூஜை, வழிபாடுகள் பஜனை என்பனவற்றை நடத்துவர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 5 மணிக்கு கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள நர்த்தன விநாயகர் ஆலயத்தில் இருந்து ஆபரணப்பெட்டியை ஐயப்ப பக்தர்களின் பேட்டைத் துள்ளலுடன் இருபாலை வீதி, கிழக்குக் கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள சபரீஸ ஐயப்ப ஆலயத்துக்குச் சென்று அங்கு 18 படிப் பூஜை, பஜனை என்பனவற்றுடன் மகரஜோதிப் பெருவிழாவையும் நடத்துவர். (ம-4)

## சிறுவர்களுக்கு உதவி!

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினர் தமது 10 ஆவது ஆண்டு நினைவு தினமான எதிர்வரும் புதன் கிழமை பாடசாலை உபகரணங்கள், துணிகள் ஆகியவற்றைப் பருத்தித் துறையில் உள்ள இராமகிருஷ்ண சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களுக்கு வழங்கவிருக்கின்றனர்.(ம-3)


**ராஜா** யாழ்ப்பாணம்

ரசிகப் பெருமக்களுக்கு எமது
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
வடிவேலு, விவேக், குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**விரலுக்கேத்த வீக்கம்**
தினசரி:- 10.30, 2, 5 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
(C/20092)



**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
ரசிகப்பெருமக்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!
இன்று முதல்
பிரசாந்த், ஷாலினி, வடிவேலு
மற்றும் பலர் நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.10 (பு.நே.)



**நாகம்ஸ்** சுன்னாகம்
மகத்தான பொங்கல் வெளியீடு
சரத்குமார், மீனா, பிரகாஷ்ராஜ்
நடித்த
**ரிஷி**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)


# பொங்கல் சிறப்புக் கவிதைகள்

## அருள்வாய்! அருள்வாய்!

அண்டம் புரக்கும் ஆதவா, மார்கழி
ஆதித்திய மூர்த்தியாய் அருள்மழை பொழிந்தாய்
விண்ணவர் போற்றும் விஷு'வின் தையில்
மினிர்பெயர் சூரிய மூர்த்தியாய் எழுந்தனை,
தேவரீர் பாதத் திருவருள் வேண்டித்
தேச மெங்கனும் சிந்தனை யன்பர்
ஆவின் பாலுடன் சர்க்கரைப் பொங்கல்
ஆக்கிக் கைகுவித் தஞ்சலி செய்கிறோம்
நல்வார் முருகன் நல்வர வேற்பநின்
றெல்லா மக்களும் எல்லா மதங்களும்
எல்லாச் சுகமும் இனிது பெருகிட
சொல்லால் மனத்தால் தோத்திரம் செய்கிறோம்.

களவு பொய் சூது கள்ளுடன் காமம்
கலந்து மலிந்திடும் கொடுமைகள் நீங்கி
பசுக் கொலை புரியும் பாதகம் நீங்கி
பயின்றிடும் வன்செயல் எல்லாம் நீங்கி,

பசித்தவர்க் குதவும் அறநெறிஓங்க
பாரெலாம் சமயப் பரம்பரை ஓங்க,
தரும நெறியின் தவத்தினர் ஓங்க,
சமாதானத்தால் சமுதாயம் ஓங்க,
விரவிய தமிழர் விடைகொடி ஓங்க,
மெய்ப்பொருட்கல்வி எங்கனும் சிறக்க
உத்தம பண்பின் மனுநெறி சிறக்க
உயர்ந்தோர் பெற்றோர் குரு எனும் இவர்களை
பத்தியால் போற்றும் மக்கள் உதிக்க
பயில்பொரு ளாதாரம் பயனெலாம் செழிக்க
பரந்தெழும் உதயனே அருள்வாய்! அருள்வாய்!!

அருட்கவி சீ.விநாசித்தம்பி.

## தீபங்கள் ஒளிரட்டும்!

புத்தம் புதிய ஆண்டில்
புதுப்பானை ஏறட்டும்
நித்தம் ஒளி வீசி - திருத்
தீபங்கள் ஒளிரட்டும் - குண்டுச்
சத்தங்கள் ஓய்ந்து - வானில்
பூவிரிக பூக்கட்டும்
இன்னல்கள் நிறைந்த வாழ்வு
அடியோடு மறையட்டும் - இத்தனை நாள்
காத்திருந்த இன்பச் சமாதானம் - இப்போதே
இம் மண்ணில் இனிவாய்ப் பொங்கட்டும்.

எம்.சுயர்சன்.

## புதுயுகம் மலரப் பொங்குவோம்

புதுயுகம் மலரப் பொங்குவோம்
புதுயுகம் மலரப் பொங்குவோம்
புதிதாய் பேசப் பொங்குவோம்
தமிழ் நிலம் மகிழப் பொங்குவோம்
தமிழர்க்கு தீர்வுவரப் பொங்குவோம்
பொருளாதாரத் தடைநீங்கப் பொங்குவோம்
போர்நின்று சமாதானம்வரப் பொங்குவோம்
பாதை திறந்திடப் பொங்குவோம்
பாங்குடன் வாழ்ந்திடப் பொங்குவோம்

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தம்.

## பொங்கட்டும் புதுப்பொங்கல்!

பானையிலே புதுநெல்லரிசி பாலுடனே வெல்லஞ்சேர்த்த
தேனெனவே திகட்டவெண்ணி திரவியங்கள் பலவும் போட்டு
ஆனமட்டும் பொங்கிப் பொங்கிப் பொங்கி ஆவலுடன் அள்ளிப் போட்டு
உண்டவே முதுகும் பின்னர் "கும்"மெனவே குடலும் வீங்க
போனதடா பொங்கல் என்று புளித்துமிக(!) ஏப்பம்விட்டு
வீணதுவாய் பொங்கல்நாளை விரயமென ஆக்கலாமோ?
மானமது வாய்த்தவெங்கள் வண்ணமுறு தமிழின் மேலே
ஆணையிடு தமிழா இனிமேல் ஆக்கிடுவோம் புதுமைப்பொங்கல்

வந்ததடா காலம்தமிழா வாஞ்சையுடன் கதிரோன்தானும்
வித்தையுடன் தமிழர்பொழுதும் விடிந்திடவே எழுந்துவிட்டான்!
சிந்தையிலே தெளிவுபேச்சில் சீரியநல் நோக்குக கொள்கை
தந்திரமும் உரிமைதன்னை தடைகளறக் கேட்கும்துணிவும்
எந்தையவர் மண்ணில்வேண்டும் இங்கிதனால் தமிழர் வாழ்வும்
சுந்தரமாய் மாறிப்பின்னர் சுதந்திரமாய் மலர வேண்டின்
செந்தமிழா பொங்குபொங்கு செழுமையுடன் இந்தப் பொங்கல்
தந்திடட்டும் தமிழர்வாழ்வில் தன்னிகரில் லாப்பெருமை!

அனலையூர்ச் சேந்தன்

## தைமகள் வந்தாள்!

தைமகள் சதங்கைகட்டி வந்தாள் - பாட
தமிழெடுத்து எனக்குத் தந்தாள்
வையகம் அன்பாலே ஏங்க - ஓடி
வருந்துபரம் யாவும் நீங்க

இருளோட்டும் கதிரவனும் நீயே! - ஊரில்
அமைதியைத் தரவருந் தாயே!
கருணைக்க விளைநிலமாய் எழுவாய்! - நல்ல
கற்றோரைப் பணிந்து தொழுவாய்.

விடியலும் தூரத்தில் இல்லை - எண்ணம்
விமோசனம் மெய்த்தாலே தொல்லை
கொடிகாட்டும் சமாதானம் தந்துவிடு! - தமிழர்
குலவாழ்வும் பேரொளியாய் வந்துவிடு!

பாலும் பொங்கவா அம்மா! - மனத்தின்
புரைக்கு மருந்தவை அம்மா!
மேலாம் நலமதனால் பெய்யும் - என்றும்
மனிதத்தான் வாழ்ந்து உய்யும்

- மு.சிங்கராயர்.

## அன்றாடப் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சிச் சபைகளின் தலைவர்கள் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திணைக்களத் தலைவர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினர். மகஜர்களையும் அமைச்சர் ஜயலத்திடம் கையளித்தனர்.

அங்கு அமைச்சர் ஜயலத் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் எல்லாம் தோல்வியில் முடிவடைந்தன.

இந்த அனுபவம் காரணமாகவே தற்சமயம் மேற்கொள்ளப்படும் பேச்சுக்கான முயற்சிகள் மெதுவாகவும் அதேசமயம் ஸ்திரத்துடனும் முன்னெடுக்கப்படுகின்றன.

வடக்கில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் கடற்றொழில் செய்வதற்கு தற்போது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் சிலவற்றைத் தளர்த்த முடிவு செய்துள்ளோம்.

தற்சமயம் 500 மீற்றர் தூரம் வரை சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இனி மேல் 750 மீற்றர் தூரமும், ஆயிரம் மீற்றர் தூரம் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஆயிரத்து 500 மீற்றர் தூரமும் சென்று மீன்பிடிக்கலாம்.

பகல்நேர மீன்பிடிப்பு நேரத்தை இரு மணிநேரம் அதாவது மாலை 6.30 மணி வரை நீடிக்க அனுமதிக்கப்படும்.

பத்து முதல் 15 குதிரைச் சக்திவலுவுள்ள அவுட்போட் மோட்டார்களை மீனவர்கள் தமது தொழிலுக்குப் பாவிக்க அனுமதிக்கப்படுவர்.

மீன்பிடி அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த முடிவுகள் உடன் நடைமுறைக்கு வரும்.

விரைவில் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும்.

வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான கண்டிவீதியைத் திறப்பது தொடர்பான பேச்சுக்கள் இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ளன. விரைவில் அந்தப்பாதை திறக்கப்படும்.

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். பொருள்களை எடுத்து வருவதில் உள்ள தடைகளை அகற்ற சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்துவேன். பயணப் பாதுகாப்பு அனுமதியை நீக்குவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடவிருக்கின்றேன்.

மன்னாருக்கும் குதிகாட்டுவானுக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலை வாரத்தில் மூன்று தடவைகள் சேவையில் ஈடுபடுத்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவுடன் பேச்சு நடத்தவிருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்துக்கும் - இரத்மலானைக்கும் இடையிலான விமான சேவைக்கு தற்சமயம் அறவிடப்படும் கட்டணத்தை அரைவாசியாகக் குறைப்பதற்கு பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. விரைவில் அது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும். - என்றார். (உ-3-180)

## தளபதியின் வாக்குமூலம் பதிவு

கொழும்பு,ஜன.14

அத்துருகிரியவில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் மறைவிடம் ஒன்றில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் விசேட பொலீஸ் விசாரணைக் குழுவினர் கடந்த வெள்ளியன்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தனர்.

"இந்த விவகாரம் குறித்து இராணுவ அதிகாரிகள் பலரிடம் பொலீஸ் குழு விசாரணை நடத்தியுள்ளது. அப்போது அவர்கள் தெரிவித்த விடயங்கள் சரியானவையா என்பதை உறுதிப்படுத்தவே பொலீஸார் என்னுடன் தொடர்பு கொண்டனர். நான் வாக்குமூலம் அளித்தேன்" - இப்படி இராணுவத் தளபதி நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இராணுவத் தளபதி பலகல்லவிடம் விசேட பொலீஸார் கடந்த திங்களன்று விசாரணை நடத்தியதாகப் பிராந்தியப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியிருந்ததும் அதனை தளபதி பலகல்ல மறுத்திருந்ததும் தெரிந்தவையே. (உ)

## புதிய மேயராக கந்தையன்

யாழ்ப்பாணம்,ஜன.14

யாழ்.மாநகர மேயராக செல்லன் கந்தையன் எதிர்வரும் புதன்கிழமை பதவியேற்கவிருக்கின்றார்.

யாழ்.மாநகர மேயராக இருந்த என்.ரவிராஜ் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து அவர் தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார்.

பிரதி மேயராகப் பதவியாற்றிய செல்லன் கந்தையனை மேயராக நியமிப்பது என்று கூட்டணி முடிவு செய்துள்ளது. இதை அடுத்தே அவர் புதன்கிழமை பதவியேற்கவிருக்கிறார்.

## தென்னிந்தியாவைத் தவிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

* அவருக்கு அவசியம் தேவைப்படும் மருத்துவக் கண்காணிப்பு.
* பேச்சு நடக்கும்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அவர் அடிக்கடி நேரில் சந்தித்து கலந்தாலோசனை நடத்த வேண்டிய அவசியம்.

இந்தக் காரணங்களை அவர் பின்வருமாறு விளக்கினார்:-

"சிறுநீரகமாற்றுச் சிகிச்சைக்குப் பின் தீவிர மருத்துவ கண்காணிப்பில் இருந்து வருகிறேன். நவீன வசதிகள் கொண்ட ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி பரிசோதனைக்காகச் சென்று வருகிறேன்.

"இப்படியான ஆஸ்பத்திரி இலங்கையில் இல்லை. தென்இந்தியாவில் சென்னை, திருவனந்தபுரம், பெங்களூர் ஆகிய நகரங்களில் மட்டும் உண்டு. இப்போது சிலர் நேபாளத்து காத்மண்டுவைக் குறிப்பிடுகிறார்கள். அங்கேயும் என்னைக் கவனிக்கக்கூடிய வசதிகள்கொண்ட ஆஸ்பத்திரி இல்லை.

"இந்தியாவில் நல்ல ஆஸ்பத்திரிகள் உள்ள வேறு இடங்களில் தங்கியிருந்தால் அங்கிருந்து வேண்டிய போது வன்னி சென்று பிரபாகரனைச் சந்திப்பது முடியாத காரியம்.

"லண்டன், ஒஸ்லோ, பாரிஸ் என்று வேறு எந்த உலக நாட்டை எடுத்துக்கொண்டாலும் இந்தக் கஷ்டம் இருக்கும். இலங்கை அரசுடன் நடக்கும் பேச்சில் நான் எப்படியும் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

"எனவேதான் தென்னிந்திய நகரம் ஒன்றில் தற்காலிகமாகத் தங்கியிருக்க விரும்புகிறேன். நான் உயிரோடு இருந்தால்தானே பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ளலாம்?

"இது மனிதாபிமானப் பிரச்சினை. இதை உணராமல் சில அரசியல் கட்சிகளும் தலைவர்களும் விஷயத்தை அரசியலாக்கிக் குழப்புகிறார்கள்

"நான் இந்தியாவில் இருந்தால் ஆபத்து என்கிறார்கள். இன்றைய என்னுடைய நிலையில் பேச்சுகளில் கலந்துகொள்வதைத் தவிர என்னால் வேறுஎன்ன செய்யமுடியும்?

"நாம் சண்டைபோட இந்தியா வரவில்லை. சமாதானத்துக்குத்தானே வருகிறோம்?

"முன்னர் எமக்கு அனைத்து உதவிகளையும் செய்து, சண்டைக்கு எம்மைத் தயார்படுத்திய நாடு இந்தியா. இன்று சமாதானத்துக்காக இந்தியா செல்ல விரும்புகிறோம் வேண்டும் என்று சண்டைக்கு வருகிறதே! என்ன விநோதம் இது?

"இந்தியாவில் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதன் மூலம் இந்தியாவும் அதில் ஏதோ ஒரு வகையில் தன் பங்கைச் செலுத்த வாய்ப்பிருக்கிறது. எனவே இந்தியா இந்த விஷயத்தில் சாதகமான முடிவுக்கு வரவேண்டும்.

"தென்னிந்தியாவில் பேச்சுக்களை நடத்துவதற்கு அனுமதி கேட்டு இந்திய மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டு விட்டது. முன்னர் ஒஸ்லோவில் இருந்தும், இப்போது கொழும்பில் இருந்தும் அனுப்பப்பட்டிருக்கிறது. அனுசரணைக்குழுவே இதைச் செய்தது.

"இந்தக் குழு நாளை செவ்வாய்க்கிழமை என்னை இங்கே லண்டனில் சந்திக்க வருகிறது. அந்தக் குழு முடிவைச் சொல்லும்." - இப்படி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். (உ)

## பூர்வாங்கப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சுக்களை நடத்தினால் அப்பேச்சுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும் என்ற அடிப்படையில் அதற்கு நோர்வே விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் -

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ)

## ஜயலத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்கும்பான் பிள்ளையார் கோயில், புளியங்கூடல் அம்மன் கோயில், ஊர்காற்றுறை சின்னமடு தேவாலயம் ஆகியவற்றுக்குச் சென்ற அவர் அங்கு பூசை வழிபாடுகளில் பங்குபற்றினார்.

அந்த ஆலயங்களுக்கு ஏற்பட்ட சேதங்களையும் அவர் பார்வையிட்டார்.

அதைத் தொடர்ந்து யாழ். நூலகத்தில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டு மாநகரசபை அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

யாழ்.நாகவிகாரை, யாழ்.பள்ளிவாசல், ஆயர் இல்லம் ஆகியவற்றுக்கும் அமைச்சர் சென்றார்.

(உ-3-16-180)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம் ஆராய்வதாக சமன் கைதிகளிடம் உறுதியளித்தார்.

அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என்.மதனராஜனையும் சமன் பார்வையிட்டு அவருடன் கலந்துரையாடினார்.

கடந்த தேர்தலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தாம், நாடாளுமன்றத்துக்குச் சென்று பதவிப்பிரமாணம் செய்துகொள்வதற்கு வசதிசெய்துதரும்படி மதனராஜன் சமனிடம் கோரியதாகத் தெரியவந்தது.

(உ-3)

## இன்னும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்கு இருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் ஒவ்வொரு நடவடிக்கையும் மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

(உ-4)


**இணைந்த கணிதம்**
(COMBINED MATHS)

பிரத்தியேக வகுப்பு
A/L 2002
S.இலட்சுமணன்

ஆரம்பம் : 2002-01-21
இடம் : 410, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
பதிவுகளை 21-01-2002 ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளவும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
(C/20292)

யா/புனித யுவானியார் ஆலய இளைஞர் மன்றம்
பங்கு மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக
நடத்தும்
யாழ்.முன்னணிக் கலைஞர்கள் இணைந்து வழங்கும்
ஜங்கரன் இசைக்குழுவினர் அளிக்கும்
"மாபெரும் இன்னிசை மழை"
இடம்: ஆலய அரங்கு காலம்: இன்று (14.01.2002) திங்கட்கிழமை
தைப்பொங்கல் நாள்
நேரம்: மாலை 5.30 மணி
(97035) அனைவரையும் வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

**விற்பனைக்கு**
புதிய திரைப்பட போஸ்டர்கள்
☆ அல்லி அர்ஜுனா
☆ ரெட்
வீடியோ சிந்து
உரும்பிராய்

**A/L: 2004**
அமைதியான நல்லூர்ச் சூழலில்! 30 மாணவரோடு!
கலை, வர்த்தக வகுப்புகள்
நல்ல நாளில் இன்று பி.ப. 4.30இற்கு (N.T.) ஆரம்பம் (97077)

| | | | |
|---|---|---|---|
| Acc. | திரு.கலைச்செல்வன் | தமிழ் | திரு.ஜெயபால் |
| Eco. | திரு.வரதராஜன் | இ.சம. | திரு.குணம் |
| Com. | திரு.ரவிகரன் | புவியி. | திரு.புவநேந்திரன் |
| Log. | திரு.ஜெயந்தன் | நா.அர. | திரு.சுதன் |
| Eng. | திரு.சுப்பிரமணியம் | வரலா. | திரு.அன்ரன் |

அனுமதிகளைப் பெற்று வகுப்புகளில் இணையலாம்
நல்லூர் சயன்ஸ் அக்கடமி

**INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)**
100 Clock Tower Road, Jaffna
O/L
விசேட கணனிப் பயிற்சி
குறுகிய காலத்தில் ! குறைந்த கட்டணத்தில் !! சிறந்த பயிற்சி நெறி !!!
ஆரம்பம் : 19.01.2002 பகல் 10மணி
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக
பெற்றோர்களே ! உங்கள் செல்வங்கள் O/L பரீட்சை முடித்து பெறுபேறுகளுக்காக காத்திருக்கிறார்களா? அவர்கள் இக்காலத்தை பயனுள்ளதாக்கி கொள்வதற்காக விசேட கணனிக் கற்கை நெறி ஒன்றை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**ராஜா கிறீம் ஹவுஸ்**
ஸ்தாபனத்தின் ஆதரவுடன்
யாழ்.சதுரங்கச் சம்மேளனம் நடத்தும்
மாபெரும் சதுரங்கப் போட்டி - 2002
* இப்போட்டியானது தேசியப் போட்டிக்கான ஆரம்ப (Novices) போட்டியாகும்.
* இப்போட்டியிலிருந்து தெரிவுசெய்யப்படும் வீரர்கள் அகில இலங்கை தேசியப் போட்டிக்கான பெரும் போட்டியில் (major tournament) கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
* இப்போட்டி இரு பாலாருக்கும் பொதுவானது.
* வயது வரையறுக்கப்படவில்லை.
* இப்போட்டியிலிருந்தே இம்முறை யாழ்.மாவட்ட சதுரங்க அணிக்கான வீரர், வீராங்கனைகள் தெரிவுசெய்யப்படுவார்கள்.
* விண்ணப்ப முடிவு திகதி : 19-01-2002 மாலை 6 மணி
* போட்டி நடைபெறும் திகதி : 20-01-2002
நேரம் : முற்பகல் 9.00 மணி
* நடைபெறும் இடம் : யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
* தொடர்பு முகவரி : 75/1, வைமன் வீதி, நல்லூர்.
(97071) சி.வித்தியாதரன், செயலாளர்.

**Jaffna Technical Institute**
No.07, Palaly Road, Jaffna. (இலுப்பையடிச் சந்தியருகில்)
இலவச கணனிப் பயிற்சிநெறி - 2002
CHILDREN'S PROGRAM
காலம் 3 மாதம்
2001 O/L
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி
அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிரிவு 5 ஆரம்பம்
(C/20276) 16-01-2002 - 3.30 மணிக்கு


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர்

# மண்ணிலும் மனங்களிலும் மாற்றங்கள் பொங்கட்டும்!

இன்று தைப்பொங்கல் திருநாள். ஈழத்தமிழர்களின் இன்னல்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வையும் அவர்களின் தலைமைத்துவத்திற்குப் புதிய நெறிப்படுத்தலையும் இன்றைய தைப்பொங்கல் திருநாள் பெற்றுத்தரவேண்டும் என்பது தமிழர்களின் குறிப்பாக ஈழத்தமிழர்களின் பெரும் வேண்டுதலாகவுள்ளது.

தொடர்ந்த போர்ச் சூழல் ஓய்ந்து, ஒருவகையான அமைதிச் சூழல் தமிழ் மண்ணில் நிலவுகிறது. வன்னிக்கான பொருளாதாரத் தடையில் தளர்வு ஏற்பட்டு வன்னிவாழ் தமிழர்களும் – விவசாயிகளும் மனமகிழ்ச்சியோடு பொங்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

வன்னிவாழ் விவசாயிகள் விவசாயத்தில் இதுவரை எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தைப்பொங்கலுடன் முடிவுகாணப்படுகிறது. வன்னி மண் செழிக்க – வளமான வாழ்வு பிறக்க வன்னி மைந்தர்களின் வழிநடத்தலில் புதுயுகம் படைக்கப்படவேண்டுமென்பது ஈழத்தமிழரின் வேணவா.

'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற ஆன்றோரின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் இன்றைய தைப்பொங்கல் திருநாள் சமாதானத்தைத் தருவிக்கவேண்டும். சமாதானச் சிந்தனையுள்ள சகலரும் இந்த விவகாரத்தில் முழுமனத்துடன் – இதய சுத்தியுடன் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்பதே நம்மில் பலரதும் வேண்டுகோளாகவுள்ளது.

சமாதானச் சூழலோடு பிறக்கும் தைப்பொங்கல், மண்ணில் நிரந்தர அமைதியை ஏற்படுத்திவிடுவதுடன் நின்றுவிடாது மனித மனங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

அண்மைய சில ஆண்டுகளாக நாட்டில் நிலவிய அசாதாரண சூழல் எமது சமூகத்தில் பல்வேறு சீர்கேடுகளையும் ஏற்படுத்தியுள்ளதை மறுக்கமுடியாது. குறிப்பாக மோசடிகள், கறுப்புச் சந்தை, சூழிபறிக்கும் போக்கு, கசிப்பு உற்பத்தி, பாலியல் ரீதியான வக்கிரங்கள், ஊழல் என்பன இவற்றுள் சிலவாகும்.

மேற்கூறிய சீர்கேடான அம்சங்கள் சமூகத்தில் இளைய தலைமுறையினர் தொடக்கம் வயோதிபர் வரையிலான பல்வேறு தரப்பினரையும் மிகவும் வலுவாகப் பாதித்துள்ளது – பாதித்துவருகிறது. இதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எனவே புதுப்பானை வைத்து, புதுநெல்லில் பொங்கிப் படைக்கும் நாம் எமது மனங்களில் நல்ல எண்ணங்களைத் தோற்றுவிக்கவேண்டும். தீய எண்ணங்களை, சமூகத்துக்கு ஒத்துப்போகாதவை எனக் கருதும் விடயங்களைப் புறந்தள்ள வேண்டும். எல்லோரும் எல்லாச் செல்வங்களும் பெற்று வாழவேண்டும் என்ற எண்ணமும், விட்டுக்கொடுப்பும், சகிப்புத் தன்மையும், பாரபட்சம் காட்டாத மனப்பாங்கும் இந்த மண்ணில் உருவாக வேண்டும்.

## நித்தி

பெரியோரைக் கனம்பண்ணுதல், ஆசானை மதித்தல், நன்றி பாராட்டும் தன்மை, பொய்மைக்குத் துணை போகாமை போன்றன தைப்பொங்கல் நாளின் சத்தியப்பிரமாணங்களாக இருக்கட்டும். எமது மண்ணில் உள்ள சமய நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் தமது எல்லைக்குள் நின்றுவிடாது பொதுநோக்கோடு செயற்படவேண்டும். அத்துடன் இளைய சமூகத்தினரிடையே புத்துணர்வுடன் செயற்படும் வகையிலான செயற்பாடுகளைத் தைப்பொங்கல்முதல் உருவாக்க வேண்டும். இதன் மூலமே நிரந்தர சமாதானமும், சாந்தியும் இந்த மண்ணில் நிலவும்.




## நல்லை ஆதீன முதல்வரின் பொங்கல் தினச் செய்தி



இன்று தமிழர் திருநாளான பொங்கல் திருநாள். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். அதேபோல் தமிழர் தம் வாழ்விலும் இன்னல்களும் இடுக்கண்களும் நீங்கி துன்பங்களும் துயரங்களும் அகன்று நல்ல நிம்மதியான சுபீட்ச வாழ்வுக்கு வழிபிறக்க வேண்டும் என்பதே எமது வேணவா.

உலகத்துக்கே ஒளிவழங்கி, யாவற்றுக்குமே மூலகாரணராக விளங்கும் சூரியபகவானுக்கு நன்றிக்கடன் செலுத்தும் பண்டிகைதான் தைப்பொங்கல். இன்பம் பொங்க, மகிழ்ச்சி பொங்க, சந்தோஷம் பொங்க இன்றைய தைப்பொங்கல் எல்லோருக்கும் நல்வாழ்வை அளிக்கும் விழாவாக மிளிரவேண்டும்.

இனியாவது அமைதியும் சமாதானமும் சுபீட்சமும் மலர்ந்து தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்று கலியுகவரதனாம் நல்லைக்கந்தனின் திருப்பாதங்களைத் தொழுது வணங்கி, நல்லைக் குருமணியின் திருவடிக் கமலங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து ஆசிகூறுகின்றோம்.

*பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!*
*சந்தோஷ சக வாழ்வு ஆனந்தமாய் மலரட்டும்!!*
'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீன முதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

## புலர்ந்திடு பொங்கலே புதுமெருகுடன்..!

புலருகின்ற பொங்கல் திருநாளே...!
பொலிவுடனே நீயும் – இங்கு
புரட்சிகள் பல செய்தே – எமக்கு
புண்ணிய நாளாய் மிளிர்ந்திடு!

எந்தையும் தாயும் மகிழ்ந்த மண்ணில்
எமக்கென்ச சுதந்திரம் ஏதுமின்றி
ஏதிலிகளாய் நிற்கும் எமது –
ஏக்கம் தீர்த்து நல்வாழ்வளித்திடு பொங்கலே!

தைபிறந்தால் வழிபிறக்கும் –
தரணியெங்கும் தமிழின் குரல் கேட்குமென
தளராத மனத்துடனே காத்திருக்கின்றோம்
தந்திடு சுதந்திரத்தை எமக்கு பொங்கலே!

திக்கெட்டும் தமிழர் கொடி பறக்க வேண்டும்...
திசையெங்கும் தமிழ் முழக்கம் கேட்க வேண்டும்...
திடமுடனே தமிழர் தலை நிமிர வேண்டும்...
தீர்க்கமுடன் இவற்றை அளித்திடு பொங்கலே!

பொங்கிடும் பொங்கல் நன்னாளில்...
பூபாளமாய் விடுதலைக் கீதம் இசைத்து – தமிழர்
புதுமைமகள் பல செய்து புரிந்திடவே
புலர்ந்திடு பொங்கலே புதுமெருகுடன்....!

சி.சிவகௌரி
மட்டுவில் வடக்கு.

## இன்பம் பொங்கட்டும்!

'பொங்கலோ பொங்கல்' என்று குதூகலித்து பட்டாசு சுட்டு பொங்கல் பொங்கிப்படைத்து மகிழ்ந்த காலம் தூரக்கனவாய் மறைந்து போய்க்கொண்டிருக்கும் வேளையில் உதயசூரியன் புதிய கதிர்களைப் பரப்பி எழுந்திருக்கின்றான்.

தமிழர் திருநாளாகிய இப்பொங்கல் நாளிலே அனைத்து மக்களின் உள்ளங்களிலும் இன்பம் பொங்க வேண்டும் என ஆசிகூறுகின்றோம். தமிழர் தம் கலை, கலாசாரம், சமயப் பண்பாட்டு விழுமியங்கள் பொங்கி எழுந்து பொலிவுறவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

நீண்டகால யுத்த மேகங்கள் உத்தராயண புண்ணிய காலத்தின் வருகையால் சற்றே விலக சுதந்திர ஒளிவீசி சுகமான தென்றல் தவழவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

அடுத்துவரும் சித்திரைப் புத்தாண்டுப் பண்டிகையானது – தமிழர் – சிங்களவர் என்ற வேறுபாடின்றி அனுடிக்கப்படும் தேசிய பண்டிகையாகும். அந்த நாளில் நாட்டுமக்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் சாந்தி, சமாதானத்துடனும் தத்தம் இடங்களில் குதூகலித்து வாழும் வகையில் பாரிய மாற்றங்கள் நிகழவேண்டும் என்றும் அதற்கு இந்த தைப்பொங்கல் திருநாள் அடிகோலட்டும் என்று வாழ்த்துகின்றோம்.

பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா,
பொதுச்செயலாளர்,
சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்.

## வசந்தமே விரிந்திடுமா?

தையின் கர்ப்பத்திலே
தங்கிவந்த சின்னமகள்
மையல் கண்காட்டி
மயக்கிடவா வந்துநின்றாள்?

பொங்கல் நாளவள்பேர்
புதுபுனலாய்ச் சந்தோஷம்
எங்கள் மண்தனிலே
எண்திசையும் வெளித்திடுமா?

விட்டுப் பிரிந்துவந்த
வீடெல்லாம் எங்கால்கள்
தொட்டுத் தழுவஇங்கு
துயரில்லாப் பொழுதொன்றா?

ஒரு நாள் ஒருபொழுதில்
உயிரெல்லாம் உறைசோகம்
திருநாள் தைதனிலே
தமிழிங்கு சிரித்திடுமா?

மண்ணில் போர்முடி
மகிழ்வெல்லாம் சிறுகீறல்
விண்ணும் அதிசயிக்க
வசந்தமே விரிந்திடுமா?

ச.சாரங்கா
சாங்கத்தானை.

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர்



அமைதியும் சுபீட்சமும் ஆனந்தமாய் மலர
பொங்கும் மங்களம் புனிதமாய் விளங்க அனைவருக்கும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

## சுனில் ஆட்ஸ்

☆ எம்மிடம் M.P. 3 CDக்கள் விற்பனைக்குண்டு.
☆ புதிய பழைய பாடல்கள் CDயில் இருந்து CDக்கும், ஓடியோ கசற்றில் இருந்து CDக்கும பதிவு செய்து தரப்படும்.

***ACME DIGITAL COLOUR LAB.***
வர்ண அச்சு சேவை.
இல.305, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/20204)

---

நலங்காணும் நன்னாளாம் இந்நாளில் எங்கள் இதயம் நிறைந்த
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



மணிக்கூடு, றேடியோ, கசற், T.V, டெக், ஸ்ரபிலைசர், அம்பிளிபயர் என்பவற்றை நவீன தொழில்நுட்பத்திறன் மூலம் உடனுக்குடன், குறித்த தவணையில் திருத்திக் கொள்ள நாடவேண்டிய இடம்:

## செல்வா வோச் வேக்ஸ்

இல.60, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C/20203)

---

குதூகலம் பொங்கும் இன்பத் திருநாளில்
எல்லோருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

## ஒசன்னா அழகுமாடம்

இருபாலைச் சந்தி, இருபாலை.



- சகல வித அழகு சாதனப் பொருள்கள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- வாசனைப் பொருள்கள்

முதலானவற்றைப் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம். (C/20146)

---

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



*அசல் 22' கரட் தங்க நகைகளை நங்கையர் விரும்பும் நவீன பாணியில் புது டிசைன்களில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:*

## சுஜாத்தா நகையகம்

பிரதான வீதி',
அச்சுவேலி'. (C/20145)

---

*கன்னித் தமிழ் வளர, இன்ப இசை பெருக, பொங்கும் புனிதமான மாட்கள நாளில், அனைவருக்கும் மனமார்ந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!*
*எந்நாளும், என்றென்றும் எப்போதும் தங்கத் தரணியில் தனித்துவமாய் மிளிர்ந்திட இந்நாளே நாடுங்கள்:*



## நியூ விதுஷா நகை மாடம்

191 -H-K., கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-2903

## நியூ விதுஷன் நகையகம்

இல.6, கஸ்தூரியார் வீதி', யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள் அசல் 22 கரட்டில்
குறித்த தவணையில்
செய்து கொடுப்பவர்கள்.
(C/20150)

---

எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

- அழகிய நவீன காலணி வகைகள்
- அழகுசாதனப் பொருள்கள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- பாட உபகரணங்கள்
- கொப்பி வகைகள் மலிவாகப் பெற்றுக்கொள்ள இன்றே விஜயஞ் செய்யுங்கள்:

## உஷா பன்சி ஹவுஸ்

பருத்தித்துறை வீதி,
கட்டைப்பிராய். (C/20140)

---

*எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது "தைப்பொங்கல்" வாழ்த்துக்கள்!*
நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ தைப்பொங்கல் வழிவகுக்கட்டும்.
எப்பொழுதும் எமது அண்ணா தயாரிப்புகளையே வாங்கிப் பாவியுஙகள.

## அண்ணா தொழிலகம்

இணுவில். இல.4, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/20200)

---

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
உளங்கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

## லைடன் புடைவை நிலையம்

(பஸ் நிலையம் முன்பாக)

*கவுண், புடைவைகள், துணிகள், சேட்டிங் சூட்டிங் மற்றும் பலவகையான துணி வகைகள் வாங்கிக்கொள்ள நாடுங்கள்:*
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/20198)

---

## IBMS இன்

பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

மலரும் இப்பொங்கல் நன்னாளில் தமிழினத்தின் துன்பங்கள் நீங்கி வாழ்வில் சுபீட்சமும், அமைதியும் நிலவ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு எமது அன்புக்குரிய மாணவர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

*IBMS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி.*

கிளை நிறுவனம்: N.M.M.V. வீதி, நெல்லியடி,
M.P.C.S. அருகில், சங்கானை.

701, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-3165 (C/20211)

இயக்குநர், விரிவுரையாளர்கள்,
உத்தியோகத்தர்கள், *IBMS.*

---



எமது அன்புக்கினிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
நாளைய நாகரிகத்தினை இன்றே அறிமுகம் செய்து வைப்பதில் தனக்கென ஒரு தனி இடம் வகிப்பவர்கள்:

## CITY TAILORS

*(Specialist on Wedding Coat & Suit)*

*புடைவைத் தினுசுகள் அனைத்தையும்*
*தரம்! மலிவு!! அமோக தெரிவுக்கு!!! அன்றும் இன்றும் என்றும்*

## சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்

(புடைவைத் தினுசுகளின் ராஜ முத்திரை)
இல.73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
*கிளை: 123, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.*
535A, *பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.*

---

யாழ்நகரில் தரமான தளபாடப் பொருள்களையும்
(பிளாஸ்ரிக் கதிரைகள் உட்பட), மெத்தை(மற்ட்றெஸ்)
வகைகளையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட



## MANGALA FURNITURE MART

இல. 153, கஸ்தூரியார் வீதி',
யாழ்ப்பாணம்.
(C/20 199)

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர்

## வருவாய் தைமகளே!

அதர்மம் அழிந்து
தர்மம் தழைத்திட
வருவாய் தைமகளே!
பாவங்கள் கழிந்து
புண்ணியங்கள் பெருகிட
வருவாய் தைமகளே!
சண்டை ஓய்ந்து
சமாதானம் பிறந்திட
வருவாய் தைமகளே!
துன்பங்கள் தொலைந்து
இன்பங்கள் சேர்ந்திட
வருவாய் தைமகளே!
வேற்றுமை மறைந்து
ஒற்றுமை ஓங்கிட
வருவாய் தைமகளே!
வறுமை அகன்று
செல்வம் பொங்கிட
வருவாய் தைமகளே!
சஞ்சலம் தீர்ந்து
சனங்கள் சிரித்திட
வருவாய் தைமகளே!
என்றென்றும் எம்வாழ்வில்
இருளகற்றி ஒளிபரப்ப
நன் நாளாய்
நீ வருவாய் என
போற்றுவோம் நாமே!

- ஆழியூர் சீ.ஏ.யசீகரன்.

## குரு பீடாதிபதியின் செய்தி!



தேவர்களுக்கு இரண்டு அயனங்கள். அதாவது ஆடி முதல் மார்கழி வரை தட்சனாயணம். தைமுதல் ஆனிவரை உத்தராயணம் எனக் காலங்களில் கணிக் கப்பட்டுள்ளது. எனவே நிகழுகின்ற இந்தத் தைப் பொங்கல் உத்தராயணமாகிய இந்தப் புண்ணிய காலத் திலே உலகிலுள்ள இந்து மக்களால் பண்பாட்டு மரபு வழியில் கொண்டாடப்படும் ஒரு திருநாளாகும் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே இத்தைத்திருநாளானது மிகவும் புனிதமானது. உழவர்களுக்கு முக்கிய நாளாக கருதப்படும். பட்டிப் பொங்கல் முதலான வழிபாடுகளும் செய்வது இம்மரபில் அமையும். உழவர்கள் தங்கள் விளைநிலங்களில் விளைதத தானியங்களைக் கொண்டு சூரியபகவானுக்கு பொங்கிப் படைப்பார்கள். இக்காலங் களில் சூரிய பகவானுடைய ஒளித்தன்மையினால் உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் தாவரங்களும் இதனுடைய சக்தியைப் பெற்று வளர்ச்சியடைந்து மக்களுக்கு உதவுவதற்காக சூரிய பக வானைத் துதி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம். இத்தினத்தில் உலகில் உள்ள சகல இந்து மக்களும் எமது கலாசார மரபின்படி ஒழுகி கடைப்பிடித்து நாட்டில் சமாதானம் சாந்தி சகல சௌபாக் கியமும் பெற எல்லாம் வல்ல அம்பிகையை திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்து மக்களுக்கு எனது நல்வாழ்த்துக்களையும் ஆசிகளை யும் கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

- பிரம்மஸ்ரீ ஜம்புவேஸ்வர மஹேஸ்வர சிவாச்சாரியார்.
*இந்து மதகுரு பீடாதிபதி*

## தை பிறக்க... வழி சிறக்கும்

தைபிறக்க வழி பிறக்கும் என்று நாங்கள் நம்புறோம்
தை சிறக்க வழி சிறக்கும் என்றும் நாங்கள் நம்புறோம்
கையுடைத்து மெய்யுடைக்கும் கடினமான போரெலாம்
கைவிடுத்து அமைதி நாட்டிற் கண்டு பொங்கி வாழுவோம்.

- *சிற்பி.*

## அத்தை மகள் வந்தெம் ஆவி கவர்வாளோ!

இத்தரையில் பிறந்தது எத்தனை தை
அத்தனையும் செய்த நன்மை எத்தனை?
நிம்மதியோ நம்வாழ்வில் பழங்கதை
தேடுகின்றோம் சுதந்திரத்தின் உதயத்தை
இத்தனை தை பிறந்தென்ன - இனி
எத்தனை தை பிறந்தாலும்
ஈடுசெய்ய முடியுமா நாமிழந்த சொத்தை
எப்போது அனுபவிப்போம் சுகத்தை
காண்பதெப்போ பிரிந்துவிட்ட சுற்றத்தை
சிந்தினோம் சொரிந்தோம் உதிரத்தை
விடியல் இன்னும் இம்மண்ணில் ஒரு பாரிய விடுகதை
புரிந்துணர் வென்பதோர் புரியாத புதிர்க்கதை
சுதந்திரத்தின் சுகத்தை சொப்பனத்தில் கண்டால்கூட
விழுந்தது எம்மார்பில் உதைக்கு மேல் உதை
சொத்தை சுகத்தை சுற்றத்தை இழந்தபின்
எந்தந் தை எமது சொந்தத் தை
பந்தத்தை பாசத்தை மறந்தபின்
எமக்கினி என்ன தை
யாரொடு நோவோம் யார்க்கெடுத்துரைப்போம் இதை
அனைத்துமே நாம் விதைத்த விதை
போர்வெறியால் ஒரு புறம் சித்திரவதை
பேரறிவால் மறுபுறம் பகிடிவதை
வெஞ்சிறையில் இளைஞர்கள் உடல்வதை
திறந்த வெளிச்சிறையில் யுவதிகள் பாலியல் வதை
இப்படியே கழிந்தது எத்தனை தை
இங்கு நாம் கண்டது என்னத்தை
இத்தனைக்கும் மத்தியில் இதோ பிறக்கிறது
இன்னுமொரு தை
இத்தனையும் இழந்தபின் இந்தத்தை
எமக்கிங்கு தருமோ சொர்க்கத்தை
இந்தத்தை தருமோ நிரந்தர சுதந்திரத்தை
இல்லையேல் தருமோ நித்தமும் தரித்திரத்தை
இந்தத்தை உயர்த்திடுமா எம்மினத்தின் அந்தஸ்தை
எழுதினோம் எழுதுகின்றோம் எத்தனை புதுக்கவிதை
எவரிங்கு செவிமடுத்தார் எம் கருத்தை
என்று நாம் தவிர்ப்போம் சுயநலத்தை
அன்றுதான் அனுபவிப்போம் சுதந்திரத்தை
அதுவே நம் வாழ்வில் இனியதை
என்று நாம் அழித்தொழிப்போம் ஆயுதக் கலாசாரத்தை
அன்றுதான் எம்மவர்க்கு இன்பத்தை
அத்தை எத்தை?
அந்தத்தை எந்தத்தை?
அத் "தை" மகள் வந்தெம் ஆவி கவர்வாளோ?

- யாழ்.வதிரிவாசன்.

## பொங்கட்டும் இன்பப் பொலிவுடனே!

| | | | |
|---|---|---|---|
| பொங்கலோ<br>பொங்குது<br>வந்தன<br>வெந்து | பொங்கல்<br>இன்று<br>போயின<br>நொந்தன | தைத்திருப்<br>புதுப்பொலி<br>யற்பல<br>தமிழ்நெஞ் | பொங்கல்<br>வுடனே<br>பொங்கல்<br>சங்கள் |
| போர்வெறி<br>பொங்கியே<br>அழிந்தன<br>பெருகிலா | கொண்ட<br>வழிந்தன<br>சொந்து<br>துயரம் | பொறுப்பிலா<br>தமிழர்எம்<br>துடித்தன<br>போயின | அரசால்<br>குருதி<br>உயிர்கள்<br>மானம் |
| இன்று<br>வாட்டிய<br>வந்து<br>விட்டது | பிறந்தது<br>அரசு<br>சேர்ந்தது<br>புத்தும் | இன்னுமோர்<br>வழுக்கியே<br>புதிய<br>புலியுடன் | பொங்கல்<br>வீழ்த்திட<br>அரசு<br>கூடி |
| உடதிக்குமோ<br>வீசுமோ<br>கதிரே<br>விதியே | விடிவெள்ளி<br>வசந்தம்<br>நீதான்<br>சதிவிடு | சமாதானம்<br>வாழ்வில்<br>கதிரவனே<br>சமாதானம் | காண<br>என்றும்<br>எமக்கு<br>மலர |
| நன்றே<br>பொங்க<br>பொங்குக<br>என்றும் | பிறந்த<br>வந்தோம்<br>இன்பம்<br>எழிலுடன் | தைத்திரு<br>புதுப்பொலி<br>அகலுக<br>வாழ்வு | நாங்காய்<br>வுடனே<br>துன்பம்<br>சிறக்க. |

ஐ.சிறிஞானநாதன்,
விவசாயபீடம்

அன்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும்
எமது தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

CANNA மார்க் கற்பூரம்




அன்றும் என்றும்
அருவமும் உருவமும்
இல்லா இறைவனை
உங்கள் மனதில்
நிலை நிறுத்தி வைப்பது
தரமான கண்ணா
மார்க் கற்பூரம்

நாடெங்கிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள்:
Pushapaa Trading Co.
93/4, Central Road, Colombo-11. Tel: 624588, Fax: 591218.

அமைதி தங்கட்டும்! மனம் மகிழ்வில் பொங்கட்டும்!
புத்தம் புதிய பொலிவோடு
இனி உங்கள் புத்தக வெளியீடுகள்!
BOASCO
போஸ்கோ திறக்கலை அழுத்தகம்
BOASCO ARTONE PRINTERS
OFF - SET AND SCREEN PRINTING
252, Point Pedro Road, Nallur, Jaffna.
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(C/20294)

# உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர்


பொங்கும் மங்களம் எங்கும் தங்கிட, தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் அனைவருக்கும் எமது உளமார்ந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு பழைமை வாய்ந்த நம்பிக்கையான ஸ்தாபனம்!
பொ.அம்பலவாணர் நகை மாளிகை
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. No.: 2264 (C/20208)

தமிழர் தம் வாழ்வில் மங்களம் பொங்கிட மாநிலம் சிறந்திட இந்த இன்பத்திருநாளில் அனைவருக்கும்
அஷ்டலக்ஷ்மி பதிப்பகத்தாரின்
இதயங்கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த 2002ஆம் ஆண்டு அஷ்டலக்ஷ்மி தினக் கலண்டர், மாதக் கலண்டர்.
தினக்கலண்டருடன் 2002ஆம் ஆண்டுப பலன் புத்தகம் இலவசம்!
கேட்டு வாங்குங்கள்! வாங்க முந்துங்கள்! கையிருப்பு இருக்கும் வரை கிடைக்கும்.
அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்,
320, செட்டியார் தெரு, கொழும்பு. T.P. 334004
424C, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (C/20207)

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
அற்புதா ரேடிங் கொம்பனி







* காகிதாதி வகைகள். * அச்சக பேப்பர் வகைகள்.
* அச்சக மை வகைகள். * அலுவலக உபகரணங்கள்.
* பாடசாலை உபகரணங்கள்
மற்றும் அனைத்துப் பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்:
அற்புதா ரேடிங் கொம்பனி
இல.198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-2505 (C/20246)

இன்பத் திருநாளாம் தமிழர் திருநாளில் அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
☛ றபர் ஸ்டாம்ப் ☛ வீட்டுப்பெயர்ப் பலகை (பிளாஸ்ரிக்)
☛ பாடசாலைச் சின்னங்கள் ☛ கடிதத் தலைப்புகள்
☛ என்கிறேவிங் மூலம் பிளாஸ்ரிக்கில் எழுதுதல்
என்பவற்றுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:
மேர்வின்ஸ் MERWIYNS
91/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்:
RAM BLAST MULTIMEDIA
FULLY COMPUTERIZED AUDIO RECORDING STUDIO
CDக்கள் கசெற்றுக்களை சிறந்தமுறையில் நவீன தொழில்நுட்ப உதவியுடன் குறைந்த செலவில் றெக்கோடிங் செய்யலாம்.
றம் பிளாஸ்ற் மல்ரிமீடியா
39, புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (C/20268)

கன்னித் தமிழ் வளர, இன்ப இசை பெருக, பொங்கும் புனிதமான மங்கள நாளில் அனைவருக்கும் எமது மனமார்ந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
ஓடியோ CDயில் இருந்து CDக்கு பாடல்களைப் பதியவும், ஓடியோ கசெட்டில் பாடல்களைப் பதிவுசெய்து கொள்ளவும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:
மெலோடியஸ் மியூசிக்
இல. 303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/20245) இல. 424, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அமைதியும் சுபீட்சமும் ஆனந்தமாய் மலர! பொங்கும் மங்களம் புனிதமாய் விளங்க! அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
அன்னராஜா (ARS) பல்பொருள் களஞ்சியம்
பலசரக்கு, கேக் தயாரிப்புப் பொருள்கள், எசன்ஸ் வகைகள், பால்மா வகைகள் மற்றும் அனைத்துப் பொருள்களையும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
இல.356, ஆஸ்பத்திரி வீதி, (C/20202) யாழ்ப்பாணம்.





அமைதியும் சுபீட்சமும் ஆனந்தமாய் மலர, பொங்கும் மங்களம் புனிதமாய் விளங்க, அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
ஓடர் நகைகள் 22 கரட்டில், குறித்த தவணையில், தர உறுதியுடன், செய்து பெற்றிட யாழ்.நகரில் சிறந்த ஸ்தாபனம்:





மனோ நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
85, (38), கன்னாதிட்டி வீதி, (C/20247) யாழ்ப்பாணம்.

என்றும் இன்பம் பெருகிட, எங்கும் மகிழ்ச்சி பொங்கிட, எமது இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
சிறீ ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்
(பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்)
இல.55, 57, ஸ்ரான்லி வீதி, T.P. No.: 2901 யாழ்ப்பாணம். (C/20201)

கன்னித் தமிழ் வளர, இன்ப இசை பெருக பொங்கும் புனிதமான மங்கள நாளில் அனைவருக்கும் எமது மனமார்ந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
டெக்கர் மோதிரம், எனாமல் நெக்லஸ்,
எனாமல் எழுத்துச் சின்னங்கள்
மற்றும் எனாமல் சம்பந்தப்பட்ட அனைத்து ஆபரணங்களுக்கும்
நவீன தொழில் நுட்ப வேலைகளால் 15 நாள்களில் ஓடர்களைச் செய்துகொள்ள யாழ்ப்பாணத்தில் நம்பிக்கையான ஸ்தாபனம் :
கோகுல கண்ணா
எனாமல் தங்கநகைத் தொழிலகம்
(ராஜா தியேட்டர் அருகில் உள்ள ஒழுங்கை)
இல.213/1C, பிறவுன் லேன், கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (C/20270)
கு.பரராமசிங்கம் (கண்ணாடி அண்ணை)

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தமது விஷேட பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றது
ஜோ எகட்டனின் ஜெசித்தாரா
உங்களுக்காக ஜெசித்தாரா தயாரிப்பான 'குங்குமப்பூ ஸ்பெஷல் சிக்கன் பிரியாணி' ரூபா 125 மட்டுமே!
எமது உணவுப் பொதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு முவர்ணக் கலண்டர் இனாம்!!
வழமையான உணவு வகைகளும் வழமைபோல.....
ஜோ எகட்டனின் ஜெசித்தாரா விருந்தகம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (C/20290)
* நவயுகத்தின் நாயகி ஜெசித்தாரா *

உதயன் தைப்பொங்கல் சிறப்பு மலர்



# அனைவருக்கும் முன்னுதாரணமாய் விளங்கிய குடாநாட்டின் அன்றைய வாழ்வியல்புகள்

நூற்றாண்டு காலமாக யாழ்ப்பாணக் குடா நாட்டு வாழ்வியல்புகள் பல என்றுமே அனைவருக்கும் முன்மாதிரியாக விளங்கியுள்ளன. ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்கு வந்ததிழிவு என்ற போக்கு அவர்தம் போக்காக இருந்து வந்துள்ளது.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் அதற்கு முன்னரும் வாழ்ந்த மக்களின் இயல்புகளை நோக்கின் தன்மானம், தன்நம்பிக்கை, விடா முயற்சி, தன்கையே தனக்குதவி எனும் சித்தாந்தங்கள் விரவிக் கிடந்துள்ளன என்பதை அறிந்து கொள்ளமுடியும். அவர்தம் பொருளாதார வலு முழுக்க முழுக்க உள்நாட்டு வளங்களையே கொண்டிருந்துள்ளது. கடின உடல் உழைப்பு அவர்களுக்கு நல்ல திடமான தேக ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் தேடிக் கொடுத்திருந்தது. வெறும் ரூபா நோட்டுக்களை மட்டும் அவர்கள் செல்வமெனக் கொண்டு வாழ்ந்திலர். பட்டி பட்டியாகப் பசுக்களையும், ஆடுகளையும், கமநிலங்களையும், பனம் தோப்புக்களையுமே செல்வமெனக் கருதினர். அனைத்துக் குடும்பங்களினதும் கோர்க்காலிகளின் மேலும் கீழும் கூடை கூடையாகச் சாமி, குரக்கன், வரகு, பயறு, எள், நெல் போன்ற தானிய வகைகளும், பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல் போன்ற உணவுப் பண்டங்களும், இராசவள்ளி, கொம்பு வள்ளி, சிறு கிழங்கு வகைகளும், சாடி சாடியாக இலுப்பை எண்ணெய், வேப்பம் எண்ணெய்யும், தேனும், நெய்யும் மிகுந்து கிடந்தன. இவை அனைத்துமே முதற்கண் செல்வமாகக் கருதப்பட்டன.

**கமக்காரர்தும் உணவு முறைகள்**

அதிகாலை நாலரை மணிக்கெல்லாம் கோவில் மணிகள் ஒலிக்கத் தொடங்கியதும் தமது கமங்களுக்குச் செல்பவர்கள் நீர்ப்பாசனம் செய்தல், உழுதல், கொத்துதல், சாறுதல், பசளையிடல், களை பிடுங்குதல் ஆதியாம் வேலைகளில் ஈடுபடுவர். காலை எட்டு மணிக்கெல்லாம் பெண்கள் தத்தம் கமங்களுக்குக் கூடைகளில் உணவெடுத்துச் செல்வர். மோரில் பச்சை மிளகாய், வெங்காயத்தை நறுக்கிக் கலந்து ஒடியற் பிட்டை அதிலிட்டுப் பிசைந்த ஆகாரமாகவோ அல்லது நீரிறைக்கத் துலா மிதிக்கும் இளந்தாரிகளுக்குச் சுடச் சுட நீற்றுப் பெட்டியில் அவித்த குரக்கன் பிட்டை அப்படியே தலைகீழாகப் பாத்திரத்திலிட்டு மேல்மூலைப் பிட்டில் நல்லெண்ணெயைச் செழிக்க ஊற்றிய சத்துணவாகவோ அன்றி அவித்த மரவள்ளி, இராசவள்ளி, கொம்புவள்ளிக் கிழங்காகவோ காலை ஆகாரம் அமைவதுண்டு.

நண்பகலில் வீடு திரும்பும் கமக்காரர்களுக்கு சுவை மிகுந்த தேவாமிர்தம் அனைய ஒடியற் கூழ் உணவு காத்திருக்கும். கூழ் ஆக்கப்படாத வேளைகளில் தினை அல்லது வரகரசிச் சோறும் மரவள்ளிக் கிழங்குக் கறியும், அறக்கீரை, முசுட்டை இலைக் கறி வகைகளும் சரக்குக் கூட்டு அரைத்துக் காய்ச்சிய சைவ அல்லது அசைவக் குழம்பும் போசனமாகப் பரிமாறப்படும்.

**"இன்றைக்கொரு சோறுண்டு"**

அந்தக் காலத்தில் நெல் அரிசிச் சாதம் என்பது விரதம், கலியாணம், பூப்புனித நீராட்டல், வீடு குடிபுகுதல், வீடு வேய்தல், மாளயம், திதி, வீட்டுக் கிருத்தியம் போன்ற நாட்களில் மட்டுமேயாம். இன்றுகூடப் பல கிராமங்களில் வயதில் மிகமிக மூத்தவர்கள் வைபவரீதியான அழைப்பொன்று வருமிடத்து "இன்றைக்கு ஒரு சோறுண்டு" எனக் கூறுவதை அவதானிக்கலாம். இது சாதாரணமாகத் தினசரி உணவில் சோறு இடம்பெறுவதில்லை என்பதையே குறிப்பதாகும். அந்தக் காலத்தில் ஒரு வீட்டில் சோறு கொடுப்பிக்கப் போகிறார்களாம் எனச் செய்தி பிறந்தால் தமர்ப்பெண் ஒருத்திக்குக் கலியாணம் நடத்தி வைக்கப் போகிறார்கள் என்று பொருள்படும். தம் பதிகளுக்குப் பூதாக் கலம் செய்து வைக்கச் சோறு சமைப்பதும் வழமை.

பொழுது சாய மீண்டும் தம் நில புலங்களுக்குச் செல்பவர்கள் அங்குள்ள பசுக்களுக்கு தினை, குரக்கன் ஒட்டு, பனை ஓலை, புல் போன்றவற்றை உணவாக அளித்து வீட்டிலுள்ள கறவைகளுக்கும் புல்லுச் சுமையுடன் மைமலாக வீடு திரும்புவர். காலையிலும் மதியத்திலும் உட்கொள்ளப்படாத ஒரு பண்டம் இரவு உணவாகத் தயாரிக்கப்படும்.

அது பனங்கட்டி சேர்த்து எண்ணெயில் சுட்ட குரக்கன் றொட்டியாகவோ சுவைமிகுந்த சாமி அரிசித் தோசையாகவோ அல்லது மரவள்ளிப் பிட்டாகவோ இருக்கலாம். பெரிய மூக்குப் பேணி நிறையப் பாலைப் பனங்கட்டியுடன் பருகி நித்திரைக்குச் செல்வோரே பெரும்பான்மையினராவர். இரவில் நுளம்புகளை விரட்ட வேப்பம் புகைச் சட்டி வீடுகள்தோறும் வைக்கப்படுவதுண்டு. இவற்றின் துணைகொண்டே காலையில் பெண்கள் மீண்டும் அடுப்புகளை மூட்டுவர். நெருப்புப் பெட்டிகளை அவர்கள் பாவித்தறியார்.

**பனம் பண்டம் ஒருவேளை உணவு**

அன்றைய குடாநாட்டினர் அனைவரும் பனையை நம்பி வாழ்ந்தனர். அதைப் போற்றினர். வணங்கினர். ஒரு வேளை உணவிற்குப் பனம் பண்டங்களைப் பாவித்த பெருமை அவர்களுக்குரியது. புழுக்கொடியலும் பனங்காய்ப் பணியாரமும் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரும் இரசித்து ருசித்துச் சாப்பிடும் பண்டங்களாக என்றுமே இருந்துள்ளன. குடாநாடு முழுவதும் பட்டி தொட்டி எல்லாம் பனங்காடுகள் மண்டிக் கிடந்த ஒரு காலகட்டத்தில் பனம் பழங்களுக்கும் தட்டுப்பாடிருந்தது. காரணம் பனாட்டுப் பாய் பாயாகத் தயாரிக்கப்படுவதற்குப் பெருந்தொகையான பழங்கள் தேவைப்பட்டமையே எனலாம். இல்லாதவர்கள் உள்ளவர்களிடம் பழங்களைப் பெற்றுப் பயன்படுத்தியபின் விதைகளை எண்ணிக் கணக்கு முடிப்பது அந்தக்காலத்தில் இருந்த வழமை. ஒவ்வொரு விதையும் ஒவ்வொரு கிழங்கு என்பதே இதன் இரகசியம். ஊமல் கொட்டைக்கும் ஒரு பெறுமதி இருந்தது.

செல்லையா என்னும் பிரபல நாடகக் கோமாளி ஒருவர்

*"காணிப் பனங்காயைத் தின்னுங்கோ*
*கண்ட இடமெல்லாம் கழியுங்கோ"* எனப்பாடி இரசிகப் பெருமக்களைச் சிரிப்பூட்டுவதுண்டாம். இந்த நடிகர் கோண்டாவிலைச் சேர்ந்தவர். பனம் பழங்கள் அனைவரதும் சாப்பாட்டுப் பண்டம் என்பதனையே கோமாளி நடிகரின் நகைச்சுவைப் பாடல் உணர்த்தி நிற்கின்றது.

**செல்லப்பா நடராசா**

ஆட்டு மாட்டு மந்தைகள் செம்மறிப் பட்டிகளை அடைத்தும் பனையோலைக் கழிவுகள், பச்சை இலை தழைகளைப் புதைத்தும் கமங்களின் பசளை வளங்களைப் பெருக்கி அமோக விளைச்சலைப் பெற்ற அனுபவத்தினர் அந்நாள் குடாநாட்டு மக்கள் அவர்களது அகராதியில் இரசாயன உரம், பீடை கொல்லிகள் என்பன இருந்ததில்லை.

**கந்தபுராண கலாசாரம்**

கந்தபுராண கலாசாரத்தைப் போற்றி வாழ்ந்த மாண்பினர் யாழ்ப்பாண மக்கள். பசுவைத் தம் தாய்போல வணங்கினர். நால்வர் சொற்படி ஒழுகினர். நாவலர் போன்றவர்களை மதித்தனர். குருவைத் தெய்வமாகப் போற்றும் பண்பு எங்கும் மேலோங்கி இருந்தது. ஊர், குடும்பப் பிணக்குகளைப் பெரியவர்கள் தீர்த்துவைத்தனர். மூத்தோர் வார்த்தை அமிர்தமெனப் போற்றப்பட்டது. கோயில்கள் அனைத்தும் பள்ளித் தலங்களாகவும் விளங்கின. மக்கள் கந்தபுராண, இராமாயண, மகாபாரதம் போன்ற இதிகாசங்களில் நிரம்பிய கல்வி கேள்வி உடையவர்களாக விளங்கினர். ஓய்வு வேளைகளில் கோயில் முன்மண்டபங்களில் முப்பது, நாற்பது பேர்வரை கூடியிருந்து புராண இதிகாசங்களின் பாத்திர குண இயல்புகளைப் பற்றி வாதப் பிரதிவாதங்களை மேற்கொள்வர். இவை பொருட்சுவை சொற்சுவை நிறைந்தவை. பட்டிமன்றங்களை ஒத்தவை. இக்காலத்தில்தான் பலநூறு ஆயுள்வேத வைத்திய மாமணிகள் கிராமங்கள்தோறும் வாழ்ந்து மக்களுக்கு மாபெரும் சேவைகளையும் ஆற்றியுள்ளனர். அந்தப் பரம்பரையில் அண்மையில் கூட எம்மிடையே வாழ்ந்தவர்கள் சுதுமலை அண்ணாமலைப் பரியாரியார், கொக்குவில் கோ.க.நடராசபிள்ளை, இணுவில் சு.இராமலிங்கம், காரைக்கால் க.அம்பலவாணர் சுவாமிகள், கல்வியங்காடு இரத்தினசபாபதிப் பரியாரியார் போன்றவர்கள். மகப்பேற்றுக்கு ஊர்கள் தோறும் நாட்டுமருத்துவிச்சிமாரும் இருந்துள்ளனர். தாய்மார்கள் பேணிய அனுபவம் வாய்ந்த நடைமுறைகள் அவர்களைப் பேணிப்பாதுகாத்து நின்றுள்ளன. குழந்தைகள் பிறந்த நாள் முதல் நான்கு வயதுவரை தாய்ப் பாலை உண்டு வளர்ந்துள்ளனர். மாதர்கள் என்றுமே அழகை இழந்ததில்லை.

**மாரிக்கு மருந்து**

மாரிகாலங்களில் காய்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு வருவது ஏதோ புதிய விடயமல்ல. இதை உணர்ந்த குடாநாட்டு மக்கள், நீற்றுப்பூசனி, பாவல், கத்தரி, பயிற்றங்காய் முதலியவற்றைக் கோடை காலங்களில் வற்றலாக்கிச் சேமித்து வைத்து உபயோகித்துக்கொண்டனர். புளி மாங்காய் வற்றலை சைவ - அசைவ குழம்பு வகைகளுக்குப் பெரும் உவப்பாகக் கொண்டனர். வானம் கொட்டு கொட்டென்று கொட்டுகையில் தினையை வறுத்து குற்றிச் சமைப்பதும் மரவள்ளிச் சீவல்களை இடித்துப் பிட்டவிப்பதும் ஒவ்வொரு வீடுகள் தோறும் நடந்துள்ள நிகழ்வுகள்தாம். குரக்கன் திரிப்பதற்கு திருகைகள் பயன்படுத்தப்பட்டன. பயன்படுத்தப்படாவிட்டாலும் இன்றும் அவை உள்ளன.

**சங்கீத இரசனை**

உத்தராயண காலத்தில் திருக்கோயில்களில் உற்சவங்கள் ஆரம்பமாகிவிட்டால் மங்கள இசையான நாதஸ்வர தவில் கச்சேரிகளை, அவற்றினூடாக சுத்தமான சம்பிரதாய சங்கீத கர்நாடக இசையை மணிக்கணக்கில் சப்பாணி கட்டி உட்கார்ந்திருந்து மெய்மறந்து இரசிப்பவர்களாகவும் சாதாரண யாழ்ப்பாண வாசிகள் அனைவரும் விளங்கியுள்ளனர். இத்தைத்திருநாளில் எமது பழைய வாழ்வியல்புகளில் ஒருசிலவற்றையாவது நினைவுகூர்ந்து இக் காலத்திற்கு ஏற்றவை அனைத்தையும் சிந்தையில் எடுத்துக்கொள்வோமாக.

*தை பிறக்கிறது.*
*இனி வழிகளெல்லாம் திறக்கும்.*

## யாழ்.ஆயரின் செய்தி

